மார்க்சிஸ்ட்
தத்துவார்த்த மாத இதழ்

ஜூலை 2020

# உள்ளடக்கம்

## உலகமயமாதல் காலத்தில் பெண்கள் மீதான சுரண்டல்

*விஜூ கிருஷ்ணன்*

இந்தியாவில் 1991-ல் காங்கிரஸ் அரசு நவதாராளவாத பொருளாதாரக் கொள்கைகளையும் அமைப்புசார் மாற்றங்களையும் தொடங்கியபோது, உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைகளுக்கு ஏற்ப பொருளாதார உலக மயமாக்கல் செயல்முறைகளும் தொடங்கின. தாராள மயமாக்கல், தனியார் மயமாக்கல், உலக மயமாக்கல் என்றெல்லாம் வழக்கமாக அழைக்கப்படும் இந்தக் கொள்கைகள் ஆரம்பம் முதல் கவர்ச்சியானதாகவே சித்தரிக்கப்பட்டு வந்தன. அவை வளர்ச்சியும் நலனும் கொண்டுவரும், முதலீடுகளைக் கொண்டுவந்து எந்த பாலினப் பாகுபாடும் இல்லாத வாய்ப்புகளை உருவாக்கும் என்றெல்லாம் சொல்லப்பட்டது. தாராள மயமாக்கப்பட்ட உலக வர்த்தகத்திலும் நிதிச் சந்தைகளிலும் பங்கேற்பது பெண்கள் உள்ளிட்ட அனைவரின் நிலைகளை உயர்த்தி, நிறைய வாய்ப்புகளைத் தரும் என்றொரு வாதமும் முன்வைக்கப்பட்டது. சிபிஐ-எம், முற்போக்குப் பெண்கள் இயக்கம் மற்றும் பிற தொழிலாளர்கள், உழவர் இயக்கங்களோ முதலிலேயே, ஏற்கனவே ஆணாதிக்க அமைப்பிலிருக்கும் சமமின்மைகள், பாகுபாடுகள், வாய்ப்புகள் மறுப்பு போன்றவற்றை இந்த நடவடிக்கைகள் இன்னும் ஆழமாக்கும் என்று சொல்லிவந்தன.

உலகமயமாதல் பெண்களுக்கு, அவர்களது சமூகப் பொருளாதாரச் சூழல்களில், வாழ்க்கைத் தரத்தில், பாலினச் சமத்துவத்தில் என்ன மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது?

உலகமயமாதலின் ஆதரவாளர்கள் பலரும் சொல்வது என்னவென்றால், உலகமயமாதலுக்கு எதிரான கொள்கைகள் எல்லாமே பெண்களின் நலனுக்கும் எதிரானவை; அதிலும் இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் அத்தகைய கொள்கைகள் பெண்களுக்கு பணி வாய்ப்புகள், சமூக பொருளாதார நிலைகளில் மேம்பாடு ஆகிய அனைத்தையுமே நடைமுறையில் மறுக்கும் கொள்கைகளாக அமையும் என்பதே ஆகும். பாகுபாடுகள் இல்லாத, பாலின ரீதியாக கவனமுடைய சமவாய்ப்புகளைத் தரும் மாற்றுகள் குறித்த எல்லா பேச்சுகளுமே அடையமுடியாத 'கற்பனையுலகு' என்று சொல்லப்படும். இதற்காக, எந்த வேலையும் இல்லாமல் இருப்பதை விட ஏதோ ஒரு வேலை நல்லது; இப்படி உருவாக்கப்படும் வேலைகள் பெண்களின் பிழைப்புக்கும், ஆண் உறவினர்களிடமிருந்து சுதந்திரமாக இருக்கவும், தங்கள் குடும்பங்களுக்கு உணவளிக்கவும் பயன்படுகின்றன என்பதுபோன்ற வாதங்கள் முன்வைக்கப்படும். உண்மையில் பெண்களுக்கு உலகமயமாதலால் ஏற்பட்ட தாக்கங்கள் சமமற்றதாகவே இருந்திருக்கின்றன. பாலின ரீதியாக மட்டுமின்றி, நகரம்-கிராமம், அமைப்பு சார்- அமைப்புசாரா தொழில்துறைகள் போன்ற பிரிவுகளிடையும் சமமின்மை நிலவுகிறது.

ஆசிய-பசிஃபிக் பகுதிகளில் ஏறக்குறைய வேளாண் பணிகள் முழுவதுமே (94.7%) **அமைப்புசாராதவைதான்** . இந்தியாவை உள்ளடக்கிய தெற்காசியாவில் இது 99.3% என்ற உச்ச அளவை எட்டுகிறது. வேளாண்மை மற்றும் வயல் வேலை **ஆகியவை உள்ளடக்கிய முதல் நிலைத் தொழில் துறையிலேயே பெரும்பான்மையான பெண்கள் பணிக்குச் செல்கிறார்கள்.** இன்றும் பெண்களுக்கு அதிகம் வேலை அளிக்கும் துறை வேளாண்மைதான். ஆனால் உலகமயமாதல், வர்த்தக தாராளவாதம், மானியங்கள் குறைப்பு, வேளாண்மை அதிகம் ஏற்றுமதியை நோக்கி நகர்தல் போன்றவற்றால் பெண்களுக்கு பணி வாய்ப்புகள் குறைந்திருக்கின்றன. வேளாண் துறையில் தீவிரமடைந்திருக்கும் நெருக்கடியால் இடர்ப்பாடிலும் கடனிலும் சிக்கியிருந்த பல லட்சம் உழவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். 75 சதவீதம் பெண்கள் இன்னும் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கின்றனர் என்றாலும் இந்த எண்ணிக்கையில் பெண்கள் கணக்கில் கொள்ளப்படுவதில்லை. ஆணாதிக்க கருத்தியலும், நிலப்பிரபுத்துவ கடந்தகாலத்தின் சமூக-கலாச்சார பாரம்பரியங்களுமே உலகமயமாதலின் கீழ் மீண்டும் மறு நிர்ணயம் செய்யப்படுகின்றன. இதில்

கல்வி, சுகாதாரம் எல்லாம் தனியார்மயமாக, அரசாங்கம் சமூக நல, பொதுநலன் செலவீனங்களில் இருந்து பின்வாங்குகிறது. இடர்பாடுகளால் குடும்பத்தின் ஆண் உறுப்பினர்கள் கிராமங்களை விட்டு இடம்பெயர, பெண்கள் வேளாண்மையையும், தினக்கூலி வேலைகளையும் மேற்கொண்டு தங்கள் குடும்பத்தின் பிழைப்பைப் பார்க்க வேண்டியுள்ளது. இப்படி சம்பாதிப்பதும் குறைந்துகொண்டே வருவதால், உணவு, கல்வி, சுகாதாரம் போன்ற தேவைகளை எதிர்கொள்வது கடினமாகிறது. கிராமங்களிலிருந்து ஆண் தொழிலாளர்கள் இடம்பெயர்வதும், மக்கட்தொகை பெண்மயமாவதாக சொல்லப்படுவதாலும் சேர்த்து ஏற்கனவே வீட்டுப் பராமரிப்புச் சுமையைத் தாங்கியிருக்கும் பெண்களின் மேல் வேளாண்மை, வேளாண்மைசார் கூலி வேலைகள், நூறு நாள் வேலைத் திட்டம் போன்ற திட்டங்களின் வேலைகள் எல்லாம் சுமத்தப்படுகிறது. இடர்ப்பாடுகளில் சிக்கிய பெண்கள் நகர்ப்பகுதிகளுக்கு இடம்பெயரும்போது பாலியல் தொல்லைகள், கடத்தல் போன்றவையும் அதிகமாகின்றன. ஏற்கனவே பெண்களுக்கு எதிராக இருந்த நிலக்குவிப்பு உலகமயமாதல் காலத்தில் இன்னும் பெருகியிருக்கிறது. நிலச் சீரமைப்புகள் திரும்பிப் பெறப் பட்டது; அதிகரிக்கும் நிலமிழப்பு போன்றவை இதற்குக் காரணமாகியுள்ளன.

வேளாண்மைக்கு வெளியிலும் பெண்கள் அதிக அளவில் அமைப்புசாரா வேலைகளில் ஈடுபடவேண்டியுள்ளதோடு, வீட்டு வேலைகள், வீடுசார் வேலைகளில் அடிமை போன்ற ஊதியத்திலோ, அல்லது ஊதியமில்லாத ஆனால் பங்களிக்கும் குடும்ப உறுப்பினர்களாகவோ மோசமான சூழல்களில் சிக்குகிறார்கள். இன்றும் கூட இந்தியாவில் 90 சதவீதம் பெண்கள் அமைப்புசாரா துறைகளில், உழைப்புக்கு மதிப்பில்லாத நிலையில், சமூகப் பாதுகாப்பு இல்லாமல், சரியான நேரத்தில் போதுமான ஊதியம் வழங்கப்படாமல்தான் பணியாற்றுகின்றனர். பெரும்பாலும் அவர்கள் தொழிலாளர்களாகவே கணக்கில் கொள்ளப்படுவதில்லை. தகவல் தொழில்நுட்பம், அதை ஒட்டிய சேவைத் துறைகள், மின்னணுத் துறை, சேவைத் துறை, உணவு பதப்படுத்துதல் போன்ற சில ‘மின்னும்’ துறைகளில் மட்டுமே, மிகச்சிறிய அளவிற்கு படித்த மேல்தட்டு வர்க்கத்தினருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன. அதே நேரத்தில் குறைவான உழைப்பே தேவைப்படும் ஏற்றுமதிக்கான பயிர்களில் அதிக கவனம் செலுத்தப்படுவது; அதிகளவு இயந்திரமயமாக்கல் போன்ற போக்குகளால் வேளாண்மைத் தொழிகளில் இருந்து பெண்கள் அதிகளவு இடம்பெயர வேண்டியிருக்கிறது. பாரம்பரிய தொழில்துறைகள் மூடப்படுவது; நிலம், நீர், காடுகள், தனிமங்கள் போன்ற இயற்கை வளங்கள் மீதான உரிமை இழப்பு,

இலாபங்களை அதிகரிக்கவும் மூலதனத்தைப் பெருக்கவும் வளங்களைச் சுரண்டும் கார்ப்பரேட் நிறுவனங்கள், இவற்றால் பெண்கள் பொருளாதார ரீதியாக பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர். உலகமயமாதலின் கூடவே கஷ்டப்பட்டு வென்ற தொழிலாளர் உரிமைகள் மீறப்படுவதும் மறுக்கப்படுவதும் நடக்கின்றன. விற்பனைத் துறை, கடைகள், துணி உற்பத்தி, வாகன உற்பத்தித் துறை போன்ற பிற துறைகளில் பெண்கள் கடும் ஒடுக்குமுறையையும் மோசமான வேலைச் சூழலையும் சந்திக்கின்றனர். ஊதியம் சார் பாகுபாடுகளையும் எதிர்கொள்கின்றனர்.

உற்பத்தித் துறையில் பெண்கள் பெரும்பாலும் குறைந்த ஊதியமுள்ள, தற்காலிகமான, வீட்டிலிருந்து செய்யும் பணிகளிலோ அல்லது குடும்பமாக நடத்தும் தொழில்களில் ஊதியமின்றியோ இருக்கின்றனர். அல்லது மூன்றாம் நிலைத் துறைகளில் விற்பனை, கல்வி போன்ற துறைகளிலும், ஊதியமுடைய வீட்டு வேலைக்காரர்களாகவும் பெரும் எண்ணிக்கையில் நியமிக்கப்படுகின்றனர். இந்த அதிகரிக்கும் தற்காலிகமாக்கல், குறைந்த ஊதியம், சுரண்டும் வேலை ஒப்பந்தம், வேலைகளில் எந்த உத்தரவாதமுமின்றி, விரும்பியபோது அமர்த்திக்கொள்ளப்பட்டும் -வெளியேற்றபட்டும், சமூகப் பாதுகாப்புகளும் ஓய்வூதியங்களும் அமைப்புரீதியாக மறுக்கபட்டும் வருவது பெருமளவு உழைக்கும் வர்க்கத்தினரை பாதித்துள்ளது. அதிலும் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள பெண்களை மேலும் பாதித்துள்ளது. ஒருங்கிணைக்கப்பட்ட தொழிலாளர் சங்கங்கள் போன்ற நடைமுறைகள் இல்லாதது பெண் தொழிலாளர்களை மேலும் பாதுகாப்பற்ற சூழலில் தள்ளுகிறது. ஒடுக்குமுறை, பாலியல் வன்முறைக்கு அவர்கள் உள்ளாவதோடு சரியான ஊதியம் போன்ற அடிப்படை உரிமைகளும் கூட அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன. அமைப்புசார் துறைகளில் பெண்கள் பங்களிப்பும், தொழிலாளர்களாக அவர்களது பணிச்சூழலும் சரிவில் இருக்கின்றன.

உலகமயமாதல் காலத்தில், உலகளவில் பாலின இடைவெளி அதிகரித்துள்ளது. உலகப் பொருளாதார மன்றத்தின் உலகளாவிய பாலின இடைவெளி குறித்த அறிக்கையின்படி, தற்போதைய மாற்றங்களின் போக்கில், பொருளாதாரப் பங்கேற்பிலும் பெண்களுக்கான வாய்ப்புகளிலும் இருக்கும் பாலின இடைவெளியை ஒழிக்க இன்னும் 257 ஆண்டுகள் ஆகும். (கடந்த ஆண்டு இது 202 ஆண்டுகளாக இருந்தது). அதாவது ஆண்களுக்குச் சமமான ஊதியம் பெற பெண்கள் 2277ஆம் ஆண்டுவரை காத்திருக்க வேண்டும். இந்த அறிக்கை பொருளாதாரம், அரசியல், கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் பாலின இடைவெளியை அளவிட்டு 153 நாடுகளை மதிப்பிட்டுள்ளது. உலகளாவிய அளவில் பெருகும் பாலின

இடைவெளியை விரிவாக சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நான்கு துறைகளில், அரசியலில்தான் அதிகபட்ச பாலின இடைவெளி இருக்கிறது என்றாலும், அது கடந்த ஆண்டை விட முன்னேறியிருக்கிறது. உலகளாவிய அரசியலில் 24.7 சதவீத பாலின இடைவெளி நிரப்பட்டிருக்கிறது. உலகமெங்கும் பாராளுமன்றங்களில் கீழ்-சபைகளில் 25.2 சதவீத இடங்களையும், 21.2 சதவீத அமைச்சரவை இடங்களையும் பெண்கள் வகித்திருக்கின்றனர். நம் நாட்டில் இந்த சதவீதம் மிகக் குறைவு. இதில் மிக மோசமான நிலையில் இருக்கும் நாடுகளில் நமது நாடும் ஒன்று. இந்தியா நான்கு இடங்கள் சரிந்து பாலின இடைவெளிப் பட்டியலில் 112ஆவது இடத்தில் இருக்கிறது. இந்தியாவில் பெண் தொழிலாளர்கள் பங்கேற்பு தொடர்ந்து குறைந்து வருவதோடு உலகின் மிகக் குறைவான அளவாகவும் இருக்கிறது. இந்திய மக்கட்தொகையில் சரிபாதி பெண்களாக இருந்தாலும், தொழிலாளர்களில் கால் சதவீதத்துக்கும் குறைவாகவே அவர்கள் இருக்கிறார்கள். தரவுகளின்படி 2004-2005இல் 42.7 ஆக இருந்த தொழிலாளர்கள் இடையேயான பெண்கள் சதவீதம், 2011-2012இல் 31.2 ஆகவும், 2013-2014இல் 31.1 சதவீதமாகவும் குறைந்துள்ளது. மனிதவள மேம்பாட்டு அறிக்கையின்படி 2019இல் தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்கேற்பு மேலும் குறைந்து முன்னெப்போதும் இருந்திராதபடி 23.6 சதவீதம் என்ற மிகக்குறைந்த அளவை எட்டியுள்ளது. பாகிஸ்தான், ஏமன், சிரியா, ஈராக் போன்ற நாடுகள் மட்டுமே நம்மைவிட பின் தங்கியிருக்க, பொருளாதாரப் பங்கேற்பு மற்றும் வாய்ப்புகளைப் பொருத்தவரை இந்தியா 149ஆவது இடத்தில் இருப்பதைப் புரிந்துகொண்டால் நமது தற்போதைய மோசமான சூழல் தெளிவாகும். சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தைப் பொருத்தவரை பாகிஸ்தானுக்கும் பின்னே 150ஆவது இடத்தில் நாம் இருக்கிறோம். அதாவது லட்சக்கணக்கான பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமமான மருத்துவச் சேவைகள் வழங்கப்படவில்லை.

இத்தகைய சூழலில் உலகமயமாதலால் பெரும்பான்மை பெண்கள் மீதான சுரண்டல் அதிகரித்திருப்பது தெளிவு. நுகர்வுக் கலாச்சாரம் என்ற பெயரில் ஆணாதிக்க விழுமியங்கள் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனால் வேளாண் துறையில், உழைக்கும் வர்க்கத்தின் தீவிர போராட்டங்களில் பெண்களின் பங்கேற்பு அதிகரித்திருப்பதோடு, சனநாயக மகளிர் இயக்கத்தின் போராளிகளும் அதிகரித்திருக்கிறார்கள்.

தமிழில்: வைலட்

## உழைக்கும் வர்க்க இயக்கமும் பெண்களின் பங்களிப்பும்

*பேரா . ஆர் . சந்திரா*

*"உழைக்கும் வர்க்கம் என்ற அடிப்படையில் எந்த பிரிவினையும் கூடாது. ஆண் பெண் இருவருமே உழைப்பாளிகள் என்று பார்க்கப்பட வேண்டும். பெண் தொழிலாளர்களுக்கு ஏற்படும் தனித்துவமான பிரச்னைகளை தனியாக எடுத்து விவாதிக்கலாம். எனவேதான், பெண்களுக்கு தனி தொழிற்சங்கம் என்ற விவாதம் எழ வாய்ப்பு இல்லை." [லெனின்]*

சுதந்திரமான குடியரசு என்பது உள்ளிட்ட எந்த முதலாளித்துவ சமுதாயத்திலும் ஆண்-பெண் சமத்துவம் என்பது சாத்தியமில்லை. தற்போது உள்ள சட்டங்கள் மாற்றப்படவேண்டும். ஏனெனில் பழமைவாத கருத்துக்களும் சட்டங்களும் உழைக்கும் வர்க்கத்தின் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. [அலெக்சாண்ட்ரா கொலந்தாய்]

உழைக்கும் வர்க்க இயக்கங்களில் பெண்களின் பங்களிப்பை பற்றி பார்ப்பதற்கு முன்பு தற்பொழுது உலக உழைப்பாளர் சந்தை பற்றிய தகவல்களை தெரிந்து கொள்வது, எதிர்காலத்தில் உழைக்கும் வர்க்கம் தன் கோரிக்கைகளை வடிவமைக்க உதவிடும். "உலக அளவில் தற்பொழுது நிலவும் வேலையின்மை பல மட்டங்களில் நிலையற்ற தன்மையை ஏற்படுத்துவதுடன் பொருளாதார ரீதியில் கடும் தாக்கத்தையும் ஏற்படுத்தும். வேலைக்காக காத்திருக்கும் மக்கள் எண்ணிக்கை உலகம் முழுவதும் அதிகரிக்கும் சூழலில் அதை ஒரு பொருளாதார பிரச்னையாக மட்டுமே பார்க்க முடியாது. அதன் சமூக விளைவுகள் ஒட்டு மொத்த சமூகத்தின் மீதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்" என்று ஐ.எல் ஒ நிறுவன டி.டி.ஜி. டெபோரா கிரீன்பீல்ட் சென்ற ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். அப்பொழுது கொரோனா பரவல் தொடங்கியிருக்கவில்லை. இருந்தும் பொருளாதார சூழல் சாதகமாக இல்லை. தற்பொழுது உலக பொருளாதாரத்தையே கொரோனா நோய் புரட்டிபோட்டுவிட்டது. எனவே

ஐ.எல்.ஓ சென்ற ஆண்டு வெளியிட்ட அறிக்கையிலேயே சுட்டிகாட்டிய அம்சங்களை திரும்பிப் பார்ப்போம். [World Unemployment and Social Outlook Trends 2019 ILO Report]

* பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட உலக பொருளாதார மந்தநிலையில் இருந்து பெரும்பாலான நாடுகள் இன்னும் மீண்டு வரவில்லை. சில துறைகளில் முன்னேற்றம் இருந்தும், வேலை உருவாக்கம் இல்லை என்பது பிரச்னைகளை தீவிரமடைய செய்கிறது என்பதே யதார்த்தம். தரமான வேலைகள் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என்பதுடன், ஏராளமான முழு நேர பணிகள் பகுதி நேர பணிகளாக மாறியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

* ரோபோ இயந்திரங்களின் பயன்பாடு மற்றும் செயற்கை அறிவு நுட்பங்களின் பயன்பாடு அதிகரிக்கும் என்றும், அவை பாதுகாப்பை மேம்படுத்தும் என்றும் கூறப்படுகிறது. ஆனால், இத்தகைய வளர்ச்சி வேலையின்மையுடன் கூடிய வளர்ச்சியாகவே அமைந்துள்ளது.

* உலக அளவில் இளைஞர்களின் வேலையின்மை அதிகரித்துக் கொண்டே போகிறது. மொத்த உழைப்பாளர்களில் முக்கால்வாசி பேர் அமைப்பு சாரா துறைகளில் பணிபுரிகின்றனர். எந்தவிதமான பாதுகாப்பு சட்டங்களும் அமலாகாத நிலையில், இவர்களின் நிலைமை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டு வருகிறது.

கொரோனா நோய் பரவலின் தாக்கம் இவர்களின் வாழ்க்கையை மேலும் கேள்விக்குறியாகியுள்ளது. இந்த நிலையில் உழைக்கும் மக்களை ஒன்று திரட்டி, அமைப்பாக்க வேண்டிய தேவை உள்ளது. கடந்த 200 ஆண்டுகளில், உழைக்கும் வர்க்கம் எவ்வளவோ தியாகங்களை செய்து, பல கோரிக்கைகளை வென்றெடுத்துள்ளது என்பதை வரலாறு சுட்டிக் காண்பிக்கிறது. மே தினம் உழைக்கும் மக்கள் தினமாக உருவெடுத்ததும் அந்த தினத்தன்று, உழைக்கும் மக்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கூட்டங்கள், பேரணிகள் நடத்துவதும் முக்கியமான நிகழ்வுகள் ஆகும். உழைக்கும் வர்க்கம் வெறும் கூலி உயர்வுக்காக மட்டும் போராடவில்லை. எட்டு மணி நேர வேலை, பணியிடங்களில் பாதுகாப்பு, பணிப்பாதுகாப்பு, உலக அமைதி என பல முழக்கங்களை உழைக்கும் மக்கள் முன்னெடுத்து வைத்துள்ளனர். இத்தகைய இயக்கங்களில் பெண்கள் குறிப்பிடத்தக்க பங்கை செலுத்தியுள்ளனர்.

உழைக்கும் வர்க்க இயக்கங்களின் வளர்ச்சிக்கு சோசலிச நாடுகள்

மட்டுமின்றி மேற்கத்திய, கீழை நாடுகளிலும் பெண்கள் சிறப்பாக பணியாற்றியுள்ளனர். சோவியத் யூனியனில் பெண் தொழிலாளர்களை ஒன்று திரட்டி அவர்களின் தனிச்சிறப்பான பிரச்னைகளில், கவனம் செலுத்தி உழைக்கும் பெண்களுக்காக பல்வேறு நல சட்டங்களை கொண்டு வந்த அலெக்சாண்ட்ரா கொல்லன்தாய்க்கு உலக உழைக்கும் வர்க்க வரலாற்றில் ஒரு தனி இடம் உண்டு. புரட்சி வந்த உடனேயே மாற்றங்கள் ஏற்பட்டுவிடவில்லை. தொடர்ச்சியான கருத்துப் போராட்டங்கள், அரசியல் கல்வி மூலம்தான், பெண்களை வென்றெடுக்க முடிந்தது.

அமெரிக்காவில், 1905-ல் "உலக உழைக்கும் மகளிர் அமைப்பு" [International Working Women] என்ற அமைப்பை மதர் ஜோன்ஸ் என்ற பெண்மணி துவக்கி, உழைக்கும் பெண்களை ஒன்று திரட்டினார். அதற்கு ஐந்து ஆண்டுகள் முன்பே, சர்வதேச ஆடை தயாரிப்பு தொழிலாளர்கள் "[International Garment Workers 1900] சங்கத்தை நிறுவினார்கள். கிட்டத்தட்ட முப்பதாயிரம் பெண்கள் அதில் உறுப்பினர்களாக சேர்ந்தனர்.

அப்பெண்கள் அவர்களே தங்கள் பணிக்கு தேவையான நூல், ஊசி போன்றவற்றை வாங்கிக் கொண்டு பணிக்கு செல்ல வேண்டும். முறையாக கூலி கொடுக்காமல் இருக்க முதலாளிகள் ஏகப்பட்ட குறைகளை சொல்வார்கள். ஒடுக்கப்பட்ட அந்த பெண் தொழிலாளிகள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தியுள்ளனர். 1909-ல் நியூயார்க் ஷர்ட் வெய்ஸ்ட் வேலை நிறுத்தம் ஆயிரக்கணக்கான பெண்களை போராட்டத்தில் உந்தித் தள்ளியது. இருபதாயிரம் பெண்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இறுதியில் அந்த ஆலை நிர்வாகம் சங்கத்தின் கோரிக்கைகளை ஏற்றது.

அதே போல, நாற்பதுகளில், ஆட்டோமொபைல் தொழிலில் கடுமையான பணிகளை [ஹெவி மெஷினரி வேலை] பெண்கள் செய்ய மறுத்தனர். லே ஆஃப் செய்யப்பட்டனர். விடாமல் போராடி அப்பெண்கள் தங்கள் கோரிக்கைகளை வென்றனர்.

ரேடியம் பெண்கள் : இன்று உலகம் முழுவதிலும் தொழிலாளர்களுக்கு ஆபத்து நிறைந்த பணிகளில் ஈடுபடும் பொழுது முக கவசம், கையுறைகள் வழங்கப்பட வேண்டும் என்பதை சட்டமாக கொண்டு வரக் காரணமாக இருந்தவர்கள் அவர்களே.

அமெரிக்காவில், 1925-ல் கடிகார உற்பத்தி தொழிற்சாலையில், ரேடியம் பூசும் பணியில் நூற்றுக்கணக்கான இளம் பெண்கள் ஈடுபட்டிருந்தார்கள்.

ரேடியம் புற்றுநோய்க்கு காரணம் என்று அவர்களுக்கு தெரியாது. பற்கள் விழுவது, எலும்பு முறிவது என்று பல இளம் பெண்கள் பணி தொடர்பான நோய்களால் தாக்கப்பட்டனர். எவ்வளவோ புகார் கொடுத்தும் நிர்வாகம் கண்டு கொள்ளவில்லை. அவர்கள் உடல் ரேடியத்தினால் மின்னியது. "ஷைனிங் கர்ல்ஸ் என்று அவர்கள் அழைக்கப்பட்டனர். கிரேஸ் பிரியர் என்ற பெண் தொழிலாளியின் விடா முயற்சியால் யு.எஸ்.ரேடியம் கார்பரேசன் மீது வழக்கு தொடரப்பட்டது. அரசியல் செல்வாக்கு மிகுந்த அந்த நிறுவனத்திற்கு எதிராக வழக்கு நடத்த வக்கீல்கள் தயங்கினர். பணி தொடர்பான நோய்க்கு பெண்களின் மனநிலையே காரணம் என்று கூறப்பட்டது. ரேடியத்தை பயன்படுத்தி மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் ரேடியத்திற்கு ஆதரவான பிரசுரங்களை வெளியிட்டனர். மன உறுதியுடன் போராடிய அப்பெண்கள் இறுதியில் வெற்றி பெற்றனர். அதன் பின்னர், தொழிலாளர் நல சட்டங்கள் பல இயற்றப்பட்டன. உலக உழைக்கும் வர்க்க இயக்கத்தில் இப்பெண்களுக்கு தனி இடம் உண்டு. "ஒரு இருட்டு அறையில், ரேடியம் பூசிய கடிகாரங்கள் மின்னுவதை போல இப்பெண்கள் வரலாற்றில் ஒளி வீசுகின்றனர்."

ஜெயா பென் தேசாய்  ஒரு இந்திய வம்சாவளி பெண். லண்டனில் உள்ள மிக பிரபலமான க்ரான்விக் தொழிற்சாலை வேலை நிறுத்த போராட்டத்திற்குத் தலைமை தாங்கி [1977-78] கோரிக்கைகளை வென்றெடுத்த சிறந்த பெண் தொழிற்சங்கவாதி. நிர்வாகம் அவரையும் அவரது குடும்பத்தினரையும் அடக்கி ஒடுக்க நினைத்தது. மிகுந்த துணிவோடும், நம்பிக்கையுடனும், போராடிய அவர் ஆசிய நாடுகளிலிருந்து இங்கிலாந்தில் பணி புரியும் தொழிலாளர்களின் நலன்களுக்காக போராடிய பெண்மணி. வேலை நிறுத்தம் நடைபெற்றபொழுது அவர் நிர்வாகத்தை பார்த்து சாடியது அன்று மிகவும் பிரபலமாகியது.

"நீங்கள் தொழிற்சாலை நடத்துவதாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இல்லை. நீங்கள் மிருகக் காட்சி சாலை நடத்துகிறீர்கள். மிருகக்காட்சி சாலையில் நிறைய மிருகங்கள் இருக்கும். சில குரங்குகள் உண்டு. அவை உங்கள் ராகத்திற்கு ஏற்ப நடனம் ஆடும்... ஆனால்.. நாங்கள் சிங்கங்கள். மானேஜர் அவர்களே, நாங்கள் சிங்கங்கள். உங்கள் தலையை கடித்து குதறி விடுவோம்... ஜாக்கிரதை!" 2016-ல் BBC அவரை சக்திவாய்ந்த பெண்கள் பட்டியலில் சேர்த்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிலும், உழைக்கும் வர்க்க ஒற்றுமையை கட்டமைப்பதில் பெண்கள் மிகச் சிறப்பாக பணியாற்றியுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர்

இடதுசாரி இயக்கத்தில், குறிப்பாக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சிறந்த பங்களிப்பை செலுத்தியவர்கள் ஆவர். விமலா ரணதிவே, அஹல்யா ரங்கனேகர், தமிழகத்தில், விவசாய தொழிலாளிகளை கிராமம் கிராமமாக சென்று ஒன்று திரட்டி அவர்களது குரலை சட்டமன்றத்தில் ஒலிக்க செய்த கே.பி. ஜானகி அம்மாள், ரயில்வே தொழிலாளர் போராட்டம் தொடங்கி பல உழைக்கும் மக்கள் போராட்டங்களுக்கு உறுதுணையாக இருந்த பாப்பா உமாநாத், மைதிலி சிவராமன், பெரிதும் அறியப்படாத திண்டுக்கல் ஆக்னஸ் மேரி ஆகியோரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

உழைக்கும் மக்கள் இன்று ஏராளமான பிரச்னைகளை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக எண்பது சதத்திற்கும் மேலான பெண்கள் அமைப்புசாரா துறையில் பணிபுரிவதால் அவர்களை வர்க்க ரீதியில் திரட்டுவதே மிகப் பெரிய சவாலாக உள்ளது. வேலையை இழந்து விடுவோம் என்ற அச்சம் மிக முக்கியமான காரணம். அதனால், எவ்வளவு கஷ்டங்கள், அவமானங்களை சந்திக்க வேண்டியிருந்தாலும், பொறுத்துக் கொண்டு வேலை செய்கின்றனர்.

இவர்கள் நிலையை பற்றி ஐ.எல்.ஒ அறிக்கை என்ன சொல்கிறது? "அமைப்பு சாரா துறையில் வேலை செய்யும் பெண்களின் தேவைகளும் பிரச்சனைகளும் பல வகைப்படும். எனவே, அவர்களை திரட்டுவது கடினம். அவர்கள் செய்யும் பணியின் தன்மைக்கேற்ப, தொடர் முயற்ச்சிகளின் மூலம் அவர்களை ஒன்று திரட்ட முயல வேண்டும்." 1993ல் புனாவில், குப்பை பொறுக்கும் தொழிலாளர்களை திரட்டும் முயற்சி பல தடைகளை தாண்டி வெற்றி பெற்றது. அது மட்டுமின்றி, இன்று, அவர்கள் சுற்றுசூழல், நகர்புற சேவை, திடக் கழிவு மேலாண்மை போன்றவற்றில் பயன்படுத்தப் படுகிறார்கள். அவர்களின் கோரிக்கைகளும் வெற்றி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வரும் காலத்தில், உழைக்கும் வர்க்கம் நிறைய சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது. சாதி, மதம் ஆகிய வேறுபாடுகளை களைந்து, விவசாய தொழிலாளர்களும், ஆலைத் தொழிலாளர்களும். அமைப்பு சார்ந்த, அமைப்புசாராத தொழிலாளர்களும் ஒன்றிணைந்து தங்கள் கோரிக்கைகளை முன்னெடுத்து செல்ல வேண்டியுள்ளது. போராட்டங்கள் மட்டுமே நமது நலன்களை காப்பதற்கு உதவும் என்பதை அழுத்தமாக மனதில் பதிய வைத்துக் கொண்டு முன்னேற வேண்டும்.

["உழைக்கும் மகளிர் இயக்கம் என்பது ஒவ்வொரு நாட்டின் நிலைமைக்கும் ஏற்றவாறு வேறுபடுகிறது. 1896-ல் சமூக ஜனநாயக கட்சியின் மாநாடு நடைபெற்றபொழுது, கிளாரா ஜெட்கின் பெண் உழைப்பாளிகளை போராளிகளாக மாற்ற சுயேச்சையான இயக்கத்தை கட்ட வேண்டும் என்றார். அதே ஆண்டு லண்டனில் நடந்த கூட்டம் ஒன்றில், முப்பது சோஷலிஸ்ட் பிரதிநிதிகள் [இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா, ஹாலந்து, பெல்ஜியம், போலந்து போன்ற நாடுகளில் இருந்து வந்தவர்கள்] பெண் சோஷலிஸ்டுகள் இயக்கம் மூலமாக, பெண் தொழிலாளர்களை திரட்டும் முயற்சிகளில் இறங்க வேண்டுமென முடிவெடுத்தனர். வர்க்க போராட்டங்களில், உழைக்கும் பெண்களை கொண்டு வர இது சிறந்த ஏற்பாடு என்று கருதினார்கள். ஜெர்மனியில் பெண் தொழிலாளர்களுக்கென ஒரு தனி பீரோ உருவாக்கப்பட்டது." [Women Workers Struggle for their Rights - Alexandra Kollantai.1919] ]

## குறைத்து மதிப்பிடப்படும் பெண்களின் உழைப்பு, ஊதிய அசமத்துவம்

*கே . ஹேமலதா*

*( தலைவர் , இந்திய தொழிற்சங்க மையம் )*

2019-20-ம் ஆண்டுக்கான உலகளாவிய பாலின இடைவெளி குறியீட்டு எண் உலகப் பொருளாதார மன்றத்தால் ஜனவரி 2020-ல் வெளியிடப்பட்டது. இப்பாலின இடைவெளி பட்டியலில், ஆய்வு நடத்தப்பட்ட 153 நாடுகளில் இந்தியா 112வது இடத்தில் உள்ளது. 2018-ம் ஆண்டில் 108வது இடத்தில் இருந்த இந்தியாவின் நிலை தற்போது 4 புள்ளிகள் சரிவடைந்துள்ளது. 2006-ம் ஆண்டில் உலகப் பொருளாதார மன்றம் பாலின இடைவெளியை கணக்கீடு செய்ய துவங்கியபோது இருந்த நிலையிலிருந்து இந்தியா தற்போது 14 புள்ளிகள் சரிவை சந்தித்துள்ளது. சுகாதாரம் மற்றும் தொடர்ந்து உயிர் வாழ்தல் ஆகிய வரையறைகளில், நமது அண்டை நாடுகளான சீனா, இலங்கை, நேபாளம் மற்றும் வங்கதேசத்தை விட மிகவும் கீழே - 150வது இடத்தில் – இந்தியா இருப்பது மிகுந்த கவலையை

அளிக்கிறது. இந்தியாவில் பெண்களுக்கான பொருளாதார வாய்ப்புகள் 35.4% என்ற மிகக் குறைவான அளவில் இருப்பதாக அறிக்கை தெரிவிக்கிறது. பாகிஸ்தான், ஏமன், சிரியா மற்றும் ஈராக் ஆகிய நான்கு நாடுகளில் உள்ள பெண்கள் மட்டும்தான் இந்தியாவில் உள்ள பெண்களை விட குறைவான பொருளாதார வாய்ப்புகளைப் பெற்றவர்களாக உள்ளனர்.

உலகப் பொருளாதார வாய்ப்புகளில் காணப்படும் இடைவெளி கடுமையான சரிவை சந்தித்திருப்பதாக உலகப் பொருளாதார மன்றம் குறிப்பிடுகிறது. இந்த இடைவெளியை சரி செய்திட 202 ஆண்டுகள் பிடிக்கும் என 2018-ம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டது. தற்போது அதற்கு 257 ஆண்டுகள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில், பெண்களின் வேலை பங்கேற்பு விகிதம் பல ஆண்டுகளாக தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது. 15 வயதுக்கு மேற்பட்ட கிராமப்புற பெண்களின் வேலை பங்கேற்பு விகிதம் 1999-2000-த்தில் 35 சதவீதமாக இருந்தது. 2011-12-ல் இது 24 சதவீதமாக குறைந்தது. 2017-18-ல் 18 சதவீதத்திற்கும் கீழே சென்றுள்ளது. நகர்ப்புற பெண்களின் பங்கேற்பு விகிதம் சுமார் 16 சதவீதம் என்ற குறைவான அளவிலேயே உள்ளது. இந்தியப் பெண்கள் எந்த வேலையையும் செய்யாமல், சும்மா இருக்கிறார்கள் என்பது இதன் பொருளல்ல.

பொருளாதார கணக்கீடுகளில் பெண்களின் வேலைகள் குறைத்து மதிப்பிடப்படுகிறது. இவ்வாறு குறைத்து மதிப்பிடப்படுவது, வேலை பங்கேற்பு விகிதத்தில் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதற்கான முக்கியமான காரணிகளில் ஒன்றாகும். இதன் காரணமாக புள்ளிவிவரங்களில் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. ‘வீட்டு வேலைகளை மட்டும் செய்வது’ மற்றும் ‘வீட்டு வேலைகளை செய்வதோடு, காய்கறிகள், விறகுகள், கால்நடைகளுக்கான தீவனங்கள், குடிநீர் போன்றவற்றை சேகரிப்பது மற்றும் வீட்டு உபயோகத்திற்கான தையல் வேலைகளையும், துணி நெய்யும் வேலைகளையும் செய்வது’ என குறிப்பிடப்படும் சில வேலைகள் கணக்கீட்டு முறைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டால், தொழிலாளர் சக்தியில் பெண்களின் பங்களிப்பு வியக்கத்தக்க அளவு அதிகரிக்கிறது. கிட்டத்தட்ட 85 சதவீதம் என்ற அளவை அது எட்டுகிறது. 2019-ம் ஆண்டில் 80 சதவீதத்திற்கும் சற்று குறைவாக இருந்த ஆண்களின் பங்கேற்பு விகிதத்தை விட நிச்சயமாக இது கூடுதலாகும். இந்தியாவில் ஆண்களை விட பெண்களே கூடுதலாக உழைக்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது.

‘பெண்களுக்கான வேலைவாய்ப்புகளில் ஏற்பட்டுள்ள சரிவானது, ஊதியம் பெறும் வேலைகளிலிருந்து ஊதியமில்லாத வேலைகளுக்கு அவர்கள் மாறுவதையே உண்மையில் பிரதிபலிக்கிறது எனப் புகழ்பெற்ற பொருளாதார வல்லுநர் ஜெயதி கோஷ் குறிப்பிடுகிறார்.

நவீன தாராளவாத யுகத்தில் பெண்களின் வாழ்நிலை சீர்குலைந்து போயிருப்பதன் காரணமாக, அதிக எண்ணிக்கையிலான பெண்கள் – குறிப்பாக ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த பெண்கள் - இத்தகைய வேலைகளை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். நவீனதாராளவாத கொள்கையின் கீழ் உண்மை ஊதியம் என்பது தேக்கமடைந்து இருப்பது அல்லது வீழ்ச்சியடைந்து வருவதோடு, அடிப்படை வசதிகள் இல்லாதது, கல்வி, சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் கட்டமைப்புகளுக்கு போதுமான அளவு அரசு செலவிடாது இருப்பதன் காரணமாக, குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்ய கூடுதல் நேரத்தை செலவிட்டு, கூடுதலாக வேலை பார்க்க வேண்டிய நிலையில் பெண்கள் உள்ளனர். சமூகத்தில் காணப்படும் ஆணாதிக்க நடைமுறைகள் காரணமாக, பெண்கள் மட்டுமே செய்ய வேண்டிய குடும்பப் பொறுப்புகளின் பகுதியாகவே இவ்வேலைகள் பார்க்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் சீர்கேடு, காடுகள் அழிப்பு, தண்ணீர் நெருக்கடி போன்றவை பெண்களின் சுமையை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன. ஆனால், இந்த வேலைகளை செய்யும் பெண்களுக்கு எந்த கூலியும் கொடுக்கப்படுவதில்லை என்பதோடு, அது வேலை என்ற கணக்கீட்டிற்குள் வருவதும் கிடையாது.

2012-ம் ஆண்டிற்கான தேசிய மாதிரி ஆய்வு அமைப்பு வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின்படி, இந்தியப் பெண்கள் தண்ணீர் சேகரிக்க நாள்தோறும் சராசரியாக 30-35 நிமிடங்கள் செலவிடுகின்றனர். அப்படி அவர்கள் நேரத்தை செலவிடவில்லை என்றால், தண்ணீருக்காக அக்குடும்பம் ஒரு மாதத்திற்கு சுமார் 93 ரூபாய்கள் செலவிட வேண்டியிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதே போன்று, விறகுகளை சேகரிப்பதோடு, சமையல் எரிபொருளுக்காக மாட்டு சாணத்தை சேகரித்து வறட்டிகளை தயாரிக்கின்றனர். உஜ்வாலா திட்டத்தின் கீழ் சமையல் எரிவாயு உருளைக்கான இணைப்பும், முதல் எரிவாயு உருளையும் இலவசமாக கொடுக்கப்படுகிறது. எனினும், சமையல் எரிவாயு உருளையின் விலை அதிகரித்து வருவதன் காரணமாக, மீண்டும் அவற்றை காசு கொடுத்து வாங்கிட இந்த ஏழைக் குடும்பங்கள் மிகவும் சிரமப்படுகின்றன. எனவே, சமையலுக்குத் தேவையான எரிபொருளை சேகரிக்கும் பணியை தொடர்ந்திட பெண்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அதேபோன்று,

குடும்பத்தின் செலவுகளைக் குறைத்திட துணி தைக்கும் வேலைகளை பெண்கள் மேற்கொள்கின்றனர்.

பிரதானமாக பெண்களால் செய்யப்படும் வேலைகள் அங்கீகரிக்கப்படாமல் இருப்பதும், அவ்வேலைகள் மதிப்பீடு செய்யப்படாமல் இருப்பதும் பெண்கள் மீது மட்டும் பாதிப்பை ஏற்படுத்தும் விஷயமல்ல. ஒட்டுமொத்த சமூகத்தின் மீதும் இது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது பெண்களை மட்டுமின்றி, அவர்கள் செய்யும் வேலைகளையும் மதிப்பிழக்கச் செய்கிறது. இதன் காரணமாக, இந்த வேலைகள் குடும்பத்தைத் தாண்டி வெளியில் செய்யப்படுகிறபோதும், குறைத்து மதிப்பிடப்பட்டு, குறைவான கூலியே கொடுக்கப்படுகிறது. அதிக எண்ணிக்கையில் பெண்கள் செய்திடும் இவ்வேலைகளுக்கு கூலி மிகக் குறைவாகவே உள்ளது. ஆணுக்கும் பெண்ணுக்கும் கொடுக்கப்படும் கூலிக்கு இடையே காணப்படும் இடைவெளி மிக அதிகமாக உள்ள நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. சராசரியாக, ஆண் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் கூலியில் மூன்றில் இரண்டு பங்கே பெண்களுக்கு கூலியாகக் கொடுக்கப்படுகிறது.

முக்கியமாக, பெண்கள் செய்யும் பணிகளை அரசே குறைத்து மதிப்பீடு செய்கிறது அல்லது அவர்களது பணிகளை குறைத்து மதிப்பிட்டு தனது செலவுகளைக் குறைத்திட சமூகத்தில் பரவலாகக் காணப்படும் இத்தகைய போக்கை பயன்படுத்துகிறது. அங்கன்வாடி, தேசிய சுகாதார திட்டம், மதிய உணவுத் திட்டம், தேசிய குழந்தை தொழிலாளர் ஒழிப்பு திட்டம் (என்சிஎல்பி), அனைவருக்கும் கல்வி போன்ற இந்திய அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் கிட்டத்தட்ட 80 லட்சம் பெண்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் உணவு சமைத்தல், அவற்றை குழந்தைகளுக்கு அளித்தல், குழந்தைகளுக்கு கற்பித்தல், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு சுகாதார சேவைகளை அளித்தல் போன்ற பணிகளை செய்து வரும் இவர்களுக்கு, “தொழிலாளர்” என்ற அங்கீகாரம் குறிப்பாக மறுக்கப்பட்டு வருகிறது. “சமூக சேவகர்கள்”, “செயல்வீரர்கள்”, “நண்பர்கள்” என்பன போன்ற பல்வேறு பெயர்களில் இவர்கள் அழைக்கப்பட்டு, அற்பத் தொகையே கூலியாகக் கொடுக்கப்படுகிறது. இவ்வாறாக, அரசின் நலத்திட்டங்கள் தொடர்பான செலவுகளுக்கு பெருமளவிலான மானியத்தை இவர்கள் அளிக்கின்றனர்.

பெண்களின் வேலைகள் குறைத்து மதிப்பீடு செய்யப்படுவது இந்தியாவிலும், இதர வளர்ந்து வரும் நாடுகளில் மட்டும் காணப்படும் நிகழ்வல்ல. வளர்ந்த நாடுகளிலும் கூட இத்தகைய போக்கை காணமுடிகிறது. ஆண்-பெண் இடையேயான வரலாற்றுபூர்வமான வேலைப் பிரிவினைக்கான நடைமுறையில், சமூகத்தின் வளர்ச்சிப் போக்கு மற்றும் ஆணாதிக்க

மதிப்பீடுகளில் இது வேரூன்றி இருக்கிறது. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் உள்ளிட்ட முதலாளித்துவ சமூகத்தில் இன்றைக்கும் கூட இவை நீடிக்கின்றன. பாலின சமத்துவத்திற்கு பெயர் பெற்று, பாலின இடைவெளி அட்டவணையின் உச்சியில் இருக்கும் நோர்டிக் நாடுகளிலும் கூட பெண்களின் வேலைகள் குறைத்து மதிப்பீடு செய்யப்படும் நடைமுறை காணப்படுகிறது. உதாரணமாக, பின்லாந்து நாட்டில், உள்ளூர் அரசுப் பணிகளில் உள்ள ஊழியர்களில் 80 சதவீதம் பேர் பெண்கள் ஆவர். அதே நேரத்தில், இவர்களில் பெரும்பகுதியினர் குழந்தை பராமரிப்பு, சுகாதாரப் பணி, சமூகப் பணிகள் போன்றவற்றில் வேலை செய்கிறார்கள்.அதிலும், கிட்டத்தட்ட 90 சதவீதத்தினர் பெண்கள் ஆவர். இவர்களே உள்ளூர் அரசுப் பணிகளில் இருப்பவர்களில் குறைவான ஊதியம் பெறுபவர்களாக உள்ளனர்.

ஆண்களோடு ஒப்பீடு செய்கையில் வீட்டுப் பொறுப்புகளில் பெருமளவிலானவற்றை இன்றைக்கும் கூட பெண்களே செய்ய வேண்டியுள்ளது. அநேகமாக உலகின் அனைத்து நாடுகளிலும் கூட இச்சுமையே பெண்கள் குறைவான அளவில் பொருளாதார பங்கேற்பிற்கும், பொருளாதார வாய்ப்புகளுக்கும் காரணமாகிறது. உலகின் எல்லா பகுதிகளிலும் ஊதியம் எதுவும் இல்லாத வீட்டு வேலைகளில் பெண்கள் செலவிடும் நேரமானது ஆண்கள் செலவிடும் நேரத்தை விட பல மடங்கு கூடுதலாக உள்ளது. நார்வே போன்ற நாடுகளில் கூட, ஆண்கள் செலவிடுவதைப் போன்ற இரண்டு மடங்கு நேரத்தை பெண்கள் ஊதியமற்ற வீட்டு வேலைகளுக்காக செலவிடுகின்றனர். ஜப்பானில் இது நான்கு மடங்கிற்கும் கூடுதலாக உள்ளது.

ஆண்டுதோறும் 10 டிரில்லியன் டாலர்கள் அளவிற்கு உலகளவில் பெண்கள் ஊதியமின்றி பராமரிப்பு பணியை செய்து வருவதாக ஒரு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.இது உலகின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 13 சதவீதமாகும். பெண்கள் ஊதியம் எதுவும் பெறாது செய்யும் வேலையின் அளவு இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.1 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாக உள்ள பெண்களின் இவ்வளவு பெரிய பங்களிப்பு, “வேலை” என்று அங்கீகரிக்கப்படுவதில்லை. இன்னும் சொல்லப் போனால், இது பெருமளவிலான சொத்து மறைமுகமான பண உதவியாக ஏழைகளிடமிருந்து நாட்டுப் பொருளாதாரத்திற்கு சென்று சேருகிறது.

பெண்கள் செய்யும் வேலைகள் மதிப்பிடப்படாது அல்லது குறைவாக மதிப்பிடப்படுவது என்பது பராமரிப்பு பணிகள் என்பதில் மட்டுமில்லை. பல்வேறு உற்பத்தி நடவடிக்கைகளில் பெண்கள் செய்யும் வேலைகளும் கூட

மதிப்பிடப்படாமல் அல்லது குறைவாக மதிப்பிடப்படுகின்றன. உதாரணமாக, இந்தியாவின் பல்வேறு வடமாநிலங்களில் உள்ள செங்கல் சூளைகளில், ஆண்களும் பெண்களும் ஜோடியாக வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டு, ஆணுக்கே கூலி அளிக்கப்படுகிறது. சமூகத்தில் காணப்படும் ஆணாதிக்கச் சிந்தனைகள் எந்த அளவிற்கு நடைமுறையில் உள்ளது என்பதை இதில் காண முடிகிறது. முதலாளிகள் மட்டுமல்ல, தொழிற்சங்கங்களும் கூட பெண் தொழிலாளர்களை அழையா விருந்தாளிகளாகவே நடத்துகிறார்கள். பல இடங்களில், பெண்களுக்கான உறுப்பினர் சந்தா அவர்களது குடும்பத்து ஆண்களிடமிருந்து வசூலிக்கப்பட்டாலும், செங்கல் சூளையில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக நேரடியாக இணைக்கப்படுவதில்லை. சங்கத்தின் ஆவணங்களிலும் அவர்கள் எண்ணிக்கை காட்டப்படுவதில்லை.

பெண்கள் செய்கிற வேலைகள் இவ்வாறு குறைத்து மதிப்பிடப்படுவது இன்றைய சமூகத்தில் பெண்களின் நிலையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. விவசாயப் பொருட்களின் உற்பத்தியில் அவர்கள் பெருமளவு பங்களிப்பைச் செலுத்துகிறபோதும், பெரும்பாலான பெண்கள் விளை நிலத்திற்கோ அல்லது இதர உற்பத்திச் சொத்துக்களுக்கோ உடமைதாரராக இருப்பதில்லை. குடும்பத்திற்குள்ளும் முடிவுகளை எடுப்பதற்கான அதிகாரம் அவர்களுக்கு குறைவாகவே உள்ளது.

ஆண்-பெண் ஊதியங்களுக்கிடையே பெருமளவு இடைவெளி உள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். இந்தியாவில் ஆண்-பெண் ஊதியங்களுக்கிடையேயான இடைவெளி 27 சதவீதம் ஆகும். 2017-ம் ஆண்டில் வெளியிடப்பட்டஆக்ஸ்ஃபாம் அறிக்கையின்படி, மிகக் குறைவான கூலியைப் பெறும் தொழிலாளர்களில் இந்தியப் பெண்கள் 60 சதவீதத்தினராகவும், அதிகளவு ஊதியம் பெறுபவர்களில் அவர்கள் வெறும் 15 சதவீதத்தினராக மட்டுமே உள்ளனர்.

ஆண் தொழிலாளர்கள் செய்வதைப் போன்ற வேலைகளையே பெண் தொழிலாளர்கள் செய்தாலும் கூட, விவசாயம், கட்டுமானம் போன்ற துறைகளில் பெண்களுக்கு ஆண்களை விட குறைவான கூலியே கொடுக்கப்படுகிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்றேயாகும். ஆனால், ஊதியத்தில் இத்தகைய பாலின இடைவெளி அணி திரட்டப்பட்ட துறை உள்ளிட்ட இதர பல துறைகளில் காணப்படுவதாக மான்ஸ்டெர் ஊதிய அட்டவணை குறிப்பிடுகிறது. ‘குறைவான கூலியை அளிக்கும் துறை’ என்றழைக்கப்படும் உற்பத்தித் துறையில் பாலின ஊதிய இடைவெளி 34

சதவீதம் என்ற அளவில் உள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒரு மணி நேரத்திற்கு ஆண்கள் ரூ. 360.90-ஐ ஊதியமாகப் பெறுவதாகச் சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் பெண்கள் வெறும் ரூ.239.60-ஐ மட்டுமே ஊதியமாகப் பெறுகிறார்கள். வங்கி, நிதித்துறை சேவைகள் மற்றும் காப்பீடு, போக்குவரத்து, லாஜிஸ்டிக்ஸ் மற்றும் தகவல் தொடர்புகள் போன்ற துறைகளில் 17.7 சதவீதம் என்ற அளவில் ஊதிய இடைவெளி காணப்படுவதாக மான்ஸ்டர் ஊதிய அட்டவணை தெரிவிக்கிறது.

இந்திய சமூகத்தில் இன்றைக்கும் கூட ஆதிக்கம் செலுத்தி வரும் ஆணாதிக்க அணுகுமுறைகளும், தனது லாபத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்ற முதலாளித்துவ சமூக அமைப்பில் காணப்படும் உந்துதலால் சுரண்டப்பட்டு வரும் பெண்களின் உழைப்பும், ஆர்எஸ்எஸ் அமைப்பின் பிற்போக்கான தத்துவத்தால் வழிநடத்தப்படும் தற்போதைய பாஜக தலைமையிலான அரசின் கீழ் மேலும் மோசமடைந்து வருகின்றன. பெண்களைக் குறித்தும் அவர்களது பங்களிப்பு குறித்தும் மோகன் பகவத் மற்றும் இதர தலைவர்கள் உள்ளிட்ட இந்த அமைப்பின் பல தலைவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கைகளில், மனுநீதியை உறுதியாகப் பற்றியுள்ள ஆர்எஸ்எஸ் அமைப்பின் அணுகுமுறை திரும்பத் திரும்ப வெளிப்பட்டுள்ளது. ராணுவத்தில் போர்முனையில் பெண்களின் பங்கு குறித்த பிரச்சனையில் உச்சநீதிமன்றத்தில் அரசின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் பாஜக அரசின் இத்தகைய அணுகுமுறையைக் காண முடிந்தது சமீபத்திய உதாரணமாகும். ‘குறைந்த உடல் தகுதிகள், பெரும்பாலும் கிராமப்புற பின்னணியிலிருந்து வந்திருக்கும் ஆண்களை மட்டுமே நமது படைப்பிரிவுகள் கொண்டிருப்பது’ என்பதோடு, ‘தாய்மை, குழந்தைப் பராமரிப்பு, உளவியல் வரம்புகள்’ ஆகியன பெண்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதால் போர் முனையில் பணியாற்றுவதற்கு பெண்கள் தகுதியற்றவர்கள் என வெட்கமின்றி அரசு நீதிமன்றத்தில் கூறியது. இந்த வாதத்தை உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை என்பது வேறு விஷயமாகும். அதே நேரத்தில், ‘படைப்பிரிவின் முன்வரிசையில் நிற்பதை பெண் சங்கடமாக உணர்கிறாள்’ என்றும், ‘தனி ஒதுக்கிடமும், பாதுகாப்பும் பெண்களுக்குத் தேவை’, ’தன்னுடன் பணிபுரியும் ராணுவ வீரர்களின் பார்வைகளிலிருந்து பெண்கள் பாதுகாக்கப்பட ” வேண்டும் என்று சொல்லும் தலைவரை ராணுவத்தில் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் மறந்திட இயலாது.

பெண்கள் செய்யும் வேலைகள் குறைவாக மதிப்பிடப்படுவதற்கு அடிப்படைக் காரணமாக உள்ள ஆணாதிக்க அணுகுமுறையை எதிர்த்துப் போராட வேண்டிய அவசியமுள்ளது. அதே நேரத்தில், இது ஒரு நீண்ட நெடிய போராட்டமாகும். ஊதியமின்றி பெண்கள் செய்யும் வேலைகளை

அங்கீகரிப்பதோடு, இத்தகைய வேலைகளுக்கு பொருளாதார மதிப்பை அளிப்பதே இன்றைக்கு செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறு செய்வது குடும்பத்திற்குள்ளும், சமூகத்திலும் பெண்களின் பொருளாதார நிலையையும், கண்ணியத்தையும் அதிகரிக்கச் செய்யும்.

**தமிழில்** – எம் கிரிஜா

## சோசலிச கியூபாவும் கொரோனா பெருந்தொற்றும்

*பேரா . வெங்கடேஷ் ஆத்ரேயா*

உலகம் முழுவதும் இன்று பெரும்பாலான நாடுகள் கொரோனா பெரும் தொற்று, அதனை எதிர்கொள்வதற்கான யுக்திகளில் ஒன்றாக ஊரடங்கு, அதனால் ஏற்படும் பொருளாதார பாதிப்புகள், கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரங்களும் வருமானமும் சிதைந்துள்ள அவலநிலை, மக்கள் மத்தியில் பரவிவரும் அச்சம் என்று தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. இத்தகைய அவநம்பிக்கை நிறைந்த சூழலில் சோசலிச சக்திகள் மட்டுமே மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் செயல்பட்டு வருகின்றன.

குறிப்பாக, பெரும்தொற்றை எதிர்கொண்டு மக்களை பாதுகாப்பதில் சிறப்புற செயல்படும் அரசுகளாக சோசலிச அமைப்பை கொண்டுள்ள மக்கள் சீனம், வியத்நாம், கியூபா, இவை தவிர இந்திய முதலாளித்துவ அமைப்புக்குள் இருந்துகொண்டே, மார்க்சிஸ்டுகள் தலைமையில் இயங்கிவரும் இடது ஜனநாயக மாநில அரசை கொண்டுள்ள இந்திய மாநிலமான கேரளம் ஆகியவை உலகம் முழுவதும் பாராட்டப்பட்டு வருகின்றன. இந்த வரிசையில் பெரும்தொற்றை எதிர்கொள்வதிலும் மக்களை பாதுகாப்பதிலும் கியூபாவின் வெற்றிகரமான அனுபவத்தை சுருக்கமாக பதிவிடுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

### கியூபா என்ற சிவப்பு நட்சத்திரம்

கியூபா நாடு அமெரிக்க ஐக்கிய நாட்டின் தெற்கு மாநிலமான ஃப்ளோரிடாவில் இருந்து சுமார் 150 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. 1492 இல் ஸ்பெயின் நாட்டை சேர்ந்த கொலம்பஸ் என்ற மாலுமியால் முதலில் ஐரோப்பியர்களுக்கு கியூபா அறிமுகமானது. 1711 இல் ஸ்பெயின் அரசின் படைகள் கியூபாவை தமது காலனி நாடாக ஆக்கிக் கொண்டன. கியூபாவின் மக்கள் கடும் சுரண்டலுக்கு உள்ளாக்கப் பட்டனர்.

அடுத்து வந்த பல பத்தாண்டுகளில் ஆப்பிரிக்க கண்டத்தில் இருந்து லட்சக்கணக்கான கருப்பின மக்கள் அடிமைகளாக கைப்பற்றப்பட்டு, இந்த நாட்டிற்கு அழைத்து வரப்பட்டு அவர்களது உழைப்பும் மிகக் கடுமையாக சுரண்டப்பட்டது. கியூபா மக்கள் ஸ்பெயின் அரசின் காலனி ஆதிக்கத்திற்கு எதிராகவும் கொடிய காலனீய முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிராகவும் மீண்டும் மீண்டும் கிளர்ந்து எழுந்தனர்.

1898 இல் அமெரிக்க வல்லரசு கியூபாவை கைப்பற்றியது. 1902 இல் கியூபாவிற்கு சுதந்திரம் அளிப்பதாக அமெரிக்க வல்லரசு அறிவித்த போதிலும் அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவின் காலனி போல் தான் கியூபா இருந்தது. 1959 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கியூபாவில் இருந்த அமெரிக்க ஆதரவு சர்வாதிகாரி பாதிஸ்தா தலைமையிலான அரசு ஃபிடெல் காஸ்ட்ரோ தலைமையிலான கியூப விடுதலைப் படையால் விரட்டி அடிக்கப்பட்ட பின்புதான் கியூபா உண்மையில் சுதந்திரம் பெற்றது.

பல ஆண்டுகளாக அன்றைய கியூபாவின் சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து, ஜனநாயக ஆட்சியை அமைக்க ஃபிடெல் தலைமையில் நடந்து வந்த ஆயுதம் தாங்கிய போராட்டம் 1959 இல் வெற்றி பெற்றது. மிக விரைவில் கியூபாவின் ஜனநாயக புரட்சி சோசலிச தன்மை கொண்டது என்பது தெளிவானது. கியூப கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் ஃபிடெல் அவர்களை தலைவராக கொண்ட ஆட்சி அமைக்கப்பட்டது.

அமெரிக்க அரசு கியூபாவின் புதிய, சுயேச்சையான ஆட்சியை கவிழ்க்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது. அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக கியூபாவின் சோசலிச ஆட்சியை அழிப்பதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் தொடர்ந்து முயற்சித்து வருகிறது. கியூபாவிற்கு எதிராக உணவு மற்றும் மருந்து விற்பனையைக் கூட தடுக்கும் கொடிய, முழுமையான வர்த்தக, தொழில்நுட்ப, பொருளாதார தடையை அறுபது ஆண்டுகளாக அமெரிக்க வல்லரசு அமலாக்கி வருகிறது. தனது நட்பு நாடுகளையும் இதனை கடைப்பிடிக்குமாறு நிர்ப்பந்திக்கிறது.

கியூபாவை அழிக்க மட்டுமின்றி, கியூபாவின் சோசலிச புரட்சியின் மகத்தான தலைவர் ஃபிடெல் காஸ்ட்ரோவை கொலை செய்யவும் பலமுறை அமெரிக்க அரசு முயன்றது. ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதிகள் அனைத்தையும் முறியடித்து, இன்று உலக நாடுகளில் பெரும்பான்மை நாடுகளின் ஆதரவை பெற்று, மக்கள் நலன் பேணுகின்ற அரசு என்ற பெருமையையும் கியூபா பெற்றுள்ளது. குறிப்பாக, மத்திய, தென்அமெரிக்க நாடுகளில் உள்ள அனைத்து முற்போக்கு சக்திகளுக்கும் எழுச்சிதரும் எடுத்துக்காட்டாக கியூபா திகழ்கிறது.

1959 இல் கியூபா மிகவும் பின்தங்கிய, கொடிய சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், பரவலான வறுமை ஆகியவற்றை இலக்கணமாக கொண்ட ஒரு சமூகமாக இருந்தது. இன்று சோசலிச கியூபா அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் மக்கள் நல்வாழ்வு, அனவைருக்கும் வேலை, நிறவெறி ஒழிப்பு, சமூக பொருளாதார சமத்துவம் ஆகிய இலக்கணங்களைக் கொண்ட நாடாக உலக அரங்கில் மிளிர்கிறது.

கியூபாவின் மனிதவள குறியீடுகள் முன்னணி முதலாளித்துவ நாடுகளுக்கு சமமாகவும் சில அம்சங்களில் அவற்றை விட சிறப்பாகவும் உள்ளன. எடுத்துக்காட்டாக, ஆரோக்கியக் குறியீடுகளில் முக்கியமான ஒன்று சேய் இறப்பு விகிதம் என்பதாகும். உயிருடன் பிறக்கும் ஆயிரம் சேய்களில் ஒரு வயது நிறைவு அடையும் முன் இறந்துவிடும் சேய்களின் எண்ணிக்கைதான் சேய் இறப்பு விகிதம் என்று அழைக்கப் படுகிறது. இது கியூபாவில் வெறும் 4 என ஆகியுள்ளது. இந்த விகிதம் 1959 இல் கிட்டத்தட்ட 50 என்றிருந்தது. அமெரிக்காவில் இந்த விகிதம் இன்றும் கியூபாவை விட அதிகமாக உள்ளது. வேறு பல பணக்கார நாடுகளுக்கும் இது பொருந்தும்.

இந்தியாவில் சேய் இறப்பு விகிதத்தின் சராசரி 2018 இல் 32 ஆக இருந்தது. சில மாநிலங்களில் இன்னும் அதிகம். எடுத்துக்காட்டாக, மத்திய பிரதேசத்தில் கிராமப் புறங்களில் இது 52 ஆக இருந்தது. ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம் என்று இதனை எடுத்துக் கொள்ளலாம். *சராசரி ஆயுட்காலம், சராசரி கல்வி பயிலும் ஆண்டுகள், எழுத்தறிவு விகிதம், இந்த குறியீடுகளில் பாலின வேறுபாடு மிக்குறைவாக இருத்தல், நகர - கிராம இடைவெளி மிககுறைவாக இருத்தல் – இவை அனைத்திலும் கியூபாவின் சாதனைகளை காணலாம்* . (இந்தியாவில் இத்தகைய சாதனைகளை கேரள மாநிலத்தில் மட்டுமே பார்க்க முடியும்.)

பொதுசுகாதாரத்தை பேணிக்காப்பதிலும் அனைத்து மக்களுக்கும் கல்வியையும் மக்கள் நல்வாழ்வையும் உறுதி செய்வதிலும் கியூபா உலகின்

பெரும்பாலான நாடுகளுக்கு வழிகாட்டியாக உள்ளது. இப் பின்புலத்தில் கியூபா கொரோனா தொற்றை எதிர்கொண்ட விதத்தை பார்க்கலாம்.

**கியூபாவும் கொரோனா பெரும் தொற்றும்**

உலக சுகாதார அமைப்பு கொரோனா பெரும் தொற்றின் புதிய குவி மையம் மத்திய, தென் அமெரிக்கா என்று அறிவித்துள்ளது. ஆனால் 2020 ஏப்ரல், மே ஆகிய இரு மாதங்களில் கியூபாவில் புதிதாக தொற்று உள்ளவர் என அறியப்படுபவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக பிரிட்டிஷ் பத்திரிக்கையான கார்டியன் ஜூன் 7 தேதியிட்ட ஒரு கட்டுரையில் கூறுகிறது. அதன்பின் நிலமை தொடர்ந்து சீரடைந்து வருகிறது.

தொற்றை எதிர்கொள்ள கியூபா அரசும் மக்களும் தயார் நிலையில் இருந்தனர். மார்ச் 24 கியூபாவில் 48 நபர்கள் தொற்று கொண்டிருந்தனர். இந்த எண்னிக்கை வேகமாக அதிகரித்தது. மார்ச் 29 இல் 119 ஆகியது, ஏப்ரல் 14 இல் ஏழு மடங்காக, 814 ஆக உயர்ந்தது. அச்சமயம் 24 பேர் இறந்திருந்தனர். அடுத்த இரு மாதங்களில் அரசும் மக்களும் இணைந்து மேற்கொண்ட, திட்டமிட்ட, கட்டுப்பாட்டுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக தொற்று கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. ஜூன் 7 கணக்குப்படி அன்றுவரை மொத்தம் 2,173 நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. 83 நபர்கள் இறந்திருந்தனர். 19 நாட்கள் கழித்து, ஜூன் 26 கணக்குப்படி கியூபாவில் அன்றுவரை மொத்தம் 2,325 நபர்களுக்கு தொற்று உறுதியாகியிருந்தது. மொத்த இறந்தவர் எண்ணிக்கை இரண்டு கூடி 85 ஆகியிருந்தது. கடைசியாக ஜூலை 3 தகவல்படி அன்றுவரை மொத்தம் தொற்று உறுதியானவர் 2,353, இறந்தவர் 86. தொற்றின் பரவல் வேகமும் இறப்பு விகிதமும் வேகமாக குறைந்துள்ளன. கியூபாவின் மக்கள் தொகை 2018 இல் 1.13 கோடியாக இருந்தது. இந்த விவரங்கள் அடிப்படையில் கொரோனா பெரும் தொற்றை கியூபா திறமையாகவும், இயன்ற அளவிற்கு குறைந்த உயிர் இழப்புடனும் எதிர்கொண்டுவருகிறது என்று கூறலாம். இதற்கு பின்புலமாக உள்ளது சோசலிச கியூபாவின் மக்கள் நல்வாழ்வு கட்டமைப்பும் அரசின் கொள்கை சார்ந்த அணுகுமுறையும் ஆகும்.

கியூப புரட்சி 1959இல் வெற்றி பெற்ற நாளில் இருந்தே மக்களின் நலன் சார்ந்து செயல்படுவதை அடிப்படை கொள்கையாக அங்குள்ள சோசலிச அரசு கடைப்பிடித்துவருகிறது. கல்வி, ஆரோக்கியம் ஆகிய இரண்டு அம்சங்களுக்கும் அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளது. 1978ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அன்றைய கசக்ஸ்தான் குடியரசின் ஆல்மா ஆடா

என்ற நகரில் நடைபெற்ற சர்வதேச மாநாடு 'அனைவருக்கும் ஆரோக்கியம்' என்ற முழக்கத்தை, இலக்கை முன்வைத்தது.

சோசலிச கியூபா அப்பொழுதே அந்த இலக்கை நோக்கி கணிசமாக முன்னேறியிருந்தது. அதற்குப் பின் கியூபா அந்த மாநாட்டில் வலியுறுத்தப்பட்ட முதல்நிலை ஆரோக்கிய வசதி (primary health care) என்பதையும் நோய் தடுப்பு ஆரோக்கிய அணுகுமுறை (preventive health care) என்பதையும் தாரக மந்திரங்களாக எடுத்துக்கொண்டு மக்கள் வாழும் ஒவ்வொரு பகுதியிலும் போதுமான மருத்துவர், செவிலியர், மருத்துவ கட்டமைப்பு இருத்தல், குடும்ப மருத்துவர் , குடும்ப செவிலியர் என்ற அணுகுமுறை, ஒவ்வொரு குடும்பத்தையும் சந்தித்து அவர்களது ஆரோக்கியத் தேவைகளை கண்டறிந்து நோய் தடுப்பு மற்றும் மக்கள் நல்வாழ்வு சேவைகளை அமைத்துக்கொள்ளுதல் என்று மக்களின் ஆரோக்கியம் தொடர்பான பல அம்சங்களையும் முழுமுனைப்புடன் முன்னெடுத்துச்சென்றது.

இந்த வரலாற்றுப் பின்னணியில் இன்று கியூபாவில் வலுவான ஆரோக்கிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. 2019 கணக்குப்படி கியூபாவில் 1000 மக்களுக்கு 9 மருத்துவர்கள் உள்ளனர். (இந்தியா: 1.34). 2014 ஆம் ஆண்டு விவரப்படி, கியூபாவில் 1000 மக்களுக்கு 5.2 மருத்துவமனை படுக்கைகள் உள்ளன. (இந்தியா, 2019 : 0.55) இந்த நிலை பணக்கார நாடுகளில் கூட இல்லை. குறிப்பாக, கியூபாவில் ஆரோக்கிய அமைப்பு மக்களுடன் மிக நெருக்கமாக உள்ளது. குடியிருப்புப் பகுதிகள் அனைத்திலும் செயல்படும் "புரட்சி பாதுகாப்பு அருகமை அமைப்புகள்" இத்தகைய ஒருங்கிணைப்புக்கு உதவுகின்றன.

இதனால் ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகள் மக்கள் வாழும் பகுதிகளில் எழும் பொழுதே கண்டறிந்து எதிர்கொள்ள முடிகிறது. கொரோனா பெரும் தொற்றை எதிர்கொள்வதில் முக்கியம் என்று உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தும் அனைத்து அம்சங்களையும் கியூபாவால் திட்டமிட்ட முறையில் அமலாக்க முடிந்திருக்கிறது.

தொற்று உள்ளதா என்று விரிவான பரிசோதனைகள் மூலம் விரைவில் அறிதல், தொற்று உள்ளவர் என்று அறியப்படுபவர் யாருடன் எல்லாம் தொடர்பு கொண்டிருந்தார் என்பதையும் விரைவில் கண்டறிந்து அவர்களையும் பரிசோதித்து, தனிமை படுத்துதல், தக்க சிகிச்சை அளித்தல் உள்ளிட்ட உரிய நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொண்டு தொற்றின் பரவலை கட்டுப்படுத்துவதில் கியூபா சிறப்புற செயல்பட்டுள்ளது.

இதற்கு ஒரு முக்கிய காரணம் ஆரோக்கியம் தொடர்பான மனிதவளம் திட்டமிட்ட அடிப்படையில் தொலைநோக்குடன் போதுமான அளவிற்கு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் கியூபா நாட்டில் மேலோங்கியுள்ள சமூக விழுமியங்கள் ஆரோக்கியத்தை மனித உரிமை எனக் கருதுகின்றன. (கியூபாவின் சோசலிச அரசியல் சாசனம் இதை உறுதிபடக் கூறுகிறது.) கியூபாவின் மருத்துவர்களும் செவிலியர்களும் லாப நோக்கத்தால் உந்தப்பட்டு செயல்படுவதில்லை. மாறாக, மக்கள் நலம் பேண அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

இன்று உலகின் பல நாடுகளிலும் அவர்கள் சேவையை அரசுகள் நாடுகின்றன. மிகுந்த சோசலிச சர்வதேச உணர்வுடன் கியூபா பல ஆப்பிரிக்க, மத்திய மற்றும் தென் அமெரிக்க நாடுகளுக்கு இந்த வகையில் உதவுகிறது. கொரோனா தொற்று காலத்திலும் கியூபாவின் உதவி பல நாடுகளுக்கு – மக்கள் நலன் கருதி, கியூபாவிற்கு எதிராக செயல்படும் பிரேசில் நாட்டுக்குக் கூட - தரப்படுகிறது. இக்காலத்தில் உலகின் மிகவும் பணக்கார ஏழு நாடுகளில் ஒன்றான இத்தாலி நாடு கூட கியூபாவின் உதவியை பெற்றுள்ளது.

கியூபாவில் கொரோனா பெரும் தொற்றை எதிர்கொள்வதில் பல பத்தாயிரம் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் படிக்கும் மாணவர்கள் களம் இறக்கப்பட்டு, வீடு வீடாக சென்று பணிபுரிகின்றனர். நமது நாட்டிலும் மனித நேயம் மிக்க மருத்துவர்களும் செவிலியர்களும் உள்ளனர். ஆனால் ஆரோக்கியம் என்பது தனியார்மயம், வணிகமயம் என்ற பாதையில் பயணித்துள்ளதால், மக்களை பாதுகாப்பது பெரும் சவாலாகியுள்ளது.

மிக முக்கியம் என்று உலகம் முழுவதும் உள்ள மருத்துவர்கள் வலியுறுத்தும் பொதுசுகாதார நடவடிக்கைகளை கியூபா திட்டமிட்டு அமலாக்குகிறது. அதற்கான கட்டமைப்பை கியூபா தொடர்ந்து உருவாக்கியுள்ளது மட்டுமின்றி, சோசலிச அரசியல் தின்னமும் கியூபா கொரோனா பெரும் தொற்றை எதிர்கொள்வதில் முக்கிய பங்கு ஆற்றியுள்ளது. நாடு முழுவதும் உயிர்ப்புடன் செயல்படும் மக்களின் ஜனநாயக அமைப்புகள் இப்பணியில் முக்கிய பங்கு ஆற்றியுள்ளன. இறுதியாக, கியூபா உறுதியான அறிவியல் அடிப்படையில் இப்பிரச்சினையை எதிர்கொண்டுவருவது அதற்கு மேலும் வலு சேர்க்கிறது.

# லெனினும் தொழிலாளி வர்க்கமும்

*என் . குணசேகரன்*

தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் இணைந்த வாழ்க்கை மாமேதை லெனின் வாழ்க்கை. இதனால், லெனின் தனக்கான தனிப்பட்ட வாழ்க்கை எதையும் அமைத்துக் கொள்ளவில்லை. சுரண்டலில் இருந்து வர்க்க விடுதலை, புரட்சி லட்சியமே அவரது வாழ்க்கை.

அவர் பிறந்து 150- ஆம் ஆண்டுகள் ஆன பிறகும் அவரது பெயர் நிலைத்து நிற்பதற்கு காரணம் என்ன? நூற்றுக்கணக்கான காரணங்களை இதற்கு சொல்ல முடியும் .ஆனால், மிக முக்கியமான காரணம் இதுதான்: உழைக்கும் மக்களுக்கென்றே உன்னதமான ஒரு உலகத்தைப் படைக்க முடியும் என்று மனித சமூக வரலாற்றில் நிரூபித்துக் காட்டியவர் லெனின். தனி மனிதராக லெனின் அந்த மாற்றத்தை சாதித்தாரா ?

துவக்கத்திலிருந்தே பலர் "ரஷ்யப் புரட்சி ஒரு தனிநபரின் சாகசம்" (one man performance) என்ற வகையில் எழுதினர். தொடர்ந்து முதலாளித்துவ எழுத்தாளர்கள் புரட்சி வெறி பிடித்த ஒரு தனிநபரால் ரஷ்யப் புரட்சி நிகழ்ந்தது என எழுதி வருகின்றனர். லெனினை ஒரு சதிக் கூட்டத் தலைவர், கொடூர மனம் படைத்த சர்வாதிகாரி என்றெல்லாம் எழுதுகின்றனர்.

தனி மனிதராக லெனினது பங்கு புரட்சியில் எவ்வாறு இருந்தது?

1) ரஷ்ய பாட்டாளி வர்க்க இயக்கம் வளர்ந்த சூழலும், இதர எதார்த்த காரணங்களும் புரட்சிக்கு சாதகமாக இருந்தன.

2) ஆனால், புரட்சியை நோக்கி முன்னேற லெனினது தத்துவ வழிகாட்டுதல்கள் புரட்சி வியூகங்கள், உத்திகள் முக்கிய காரணங்களாக அமைந்தன. புரட்சி உத்திகளை அன்றைய போல்ஷ்விக் கட்சியில் நீண்ட விவாதங்கள் நடத்தி ,கட்சியின் முடிவாக அவற்றை முன்னெடுக்கச் செய்ததில் லெனினுக்கு பெரும் பங்குண்டு. புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிக்கு அடித்தளமிட்டது.

இந்த இரண்டையும் இணைத்துப் பார்ப்பதே சரியான பார்வை.

**ஒரே இலட்சியம்**

1870-ஏப்ரல் 22 அன்று பிறந்த லெனின் வாழ்ந்தது, 54 ஆண்டுகள்தான். அந்த 54 ஆண்டுக் கால வாழ்க்கை முழுவதும் அவர் தனக்கென்று சொந்த நோக்கங்கள் எதையும் வைத்துக் கொண்டதில்லை. ஒரே ஒரு இலட்சியத்தை நோக்கித்தான் அவரது வாழ்க்கை இயங்கியது. வரலாற்றில் இதுவரை அடிமைத்தனத்திற்கும்,சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் ஆளான மக்களிடம் ஆட்சி அதிகாரம் வர வேண்டும் என்பதுதான் அந்த இலட்சியம்.

அமெரிக்க எழுத்தாளர் ஜான் ரீட் ரஷ்யாவில் புரட்சி நடந்ததை நேரில் கண்ட எழுத்தாளர். பிரசித்தி பெற்ற அவரது "உலகைக் குலுக்கிய பத்து நாட்கள்" என்னும் நூலில் எழுதுகிறார்:

"வரலாற்றில் மிகச் சொற்ப தலைவர்களே அவரைப் போல மக்களது பேரன்புக்கும் பாராட்டுக்கும் பாத்திரமாகி இருப்பார்கள். விசித்திரமான மக்கள் தலைவர் - முற்றிலும் அறிவாற்றல் என்னும் தகுதியின் காரணமாகத் தலைவராகியவர். வண்ணக் கவர்ச்சியில்லை, மிடுக்கில்லை, மனம் தளர்ந்து விட்டுக் கொடுக்கும் இயல்பில்லை; தன்வயப்பட்ட விருப்பு வெறுப்பில்லை. படாடோபமான தனிப் பாணிகள் ஏதுமில்லை - ஆனால் ஆழ்ந்த கருத்துகளை எளிய முறையில் விளக்கும் ஆற்றலும் ஸ்தூல நிலைமைகளைப் பகுத்தாராயும் திறனும் நிரம்பப் பெற்றவர். இவற்றுடன் கூட மதிநுட்பமும் அசாதாரணமான தொலைநோக்குப் பார்வையும் சேர்ந்திருந்தன.""

**திறந்த புத்தகம்**

அவரது வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். அவரது வாழ்க்கையை முப்பெரும் பிரிவுகளாகக் காணலாம். அவரது வாழ்க்கையின் முதல் பகுதி, புரட்சி இலட்சியத்தை வடிவமைத்த காலம். அதாவது சோஷலிஸம் எனும் புதிய சமூகத்தை அமைப்பதற்கு மார்க்சிய தத்துவம் வழிகாட்டிய அடிப்படையில், திட்டம் உருவாக்கிய காலம்.

இதற்கு அடுத்த அவரது வாழ்நாள் கட்டம், புரட்சிகர இலட்சியத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பெருவாழ்வாக அமைந்தது. அவரது இறுதிக் காலம், பாட்டாளி வர்க்க ஆட்சியை அமைத்து, ஒரு சோசலிச முன்மாதிரி அரசைக் கட்டமைத்த காலமாக அமைந்தது. கடலில் இடைவிடாது நீந்திக் கொண்டிக்கும் மீன் போன்று, புரட்சி இலட்சியக்கடலில் இடைவிடாது நீந்திக் கொண்டிருக்கும் வாழ்க்கையாக அவரது வாழ்க்கை இருந்தது.

1917ஆம் ஆண்டில் ரஷ்யாவில் இரண்டு புரட்சிகள் நிகழ்ந்தன. ஜார் மன்னராட்சி கொடுங்கோன்மையிலிருந்து ரஷ்யா விடுதலை பெற்ற, பிப்ரவரி புரட்சி. அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியான போல்ஷ்விக்  கட்சி மற்றும் இதர பல குழுக்களின் ஆதரவோடு, கெரன்ஸ்கி தலைமையிலான முதலாளித்துவ அரசாங்கம் அதிகாரத்திற்கு வருகின்றது. தொழிலாளி வர்க்க கட்சியான போல்ஷ்விக் கட்சி ஜார் மன்னராட்சி அகற்றப்பட வேண்டும் என்பதற்காக கெரன்ஸ்கி ஆட்சிக்கு வருவதற்கு உறுதுணையாக இருந்தது.

அந்த முதலாளித்துவ அரசு ஏற்றுக்கொண்ட எதையும் அமலாக்கவில்லை. ரஷ்ய மக்கள் போரின் கொடுமையால், வாடிக் கொண்டிருக்கிற நிலையில், போரைக் கைவிட வாக்குறுதி அளித்த அரசு, போரை நீட்டிக்க முயற்சித்தது. அந்த அரசு நிலப்பிரபுக்கள், பெரும் தொழிலதிபர்கள், வங்கி உரிமையாளர்கள் போன்றோரின் அரசாக இருப்பதால், தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் அளித்த வாக்குறுதிகளை நிச்சயமாக நிறைவேற்றாது என லெனின் உறுதியாகக் கூறினார்.

எனவே, பாட்டாளி மற்றும் ஏழை விவசாயிகள் உள்ளடக்கிய சோவியத்துகள் ஆட்சி அதிகாரத்தை உடனடியாக கைப்பற்ற வேண்டுமென வலியுறுத்தினார்.

நாடு கடத்தப்பட்டு, சூரிச் நகரில் இருந்த லெனின், ரஷ்யாவின் பெட்ரோகிராடு நகரை வந்தடைந்தார்.அவர் கையோடு கொண்டு வந்த ஒரு சிறு குறிப்பில் ‘ஏப்ரல் ஆய்வுரைகள்’ என்று அழைக்கப்பட்ட புரட்சிக்கான திட்டம் இருந்தது. அதில் பல கடமைகளை முன்வைத்தார்.

- உடனடியாக முதல் உலகப் போரில் பங்கேற்ற  ரஷியா போரிலிருந்து விலக வேண்டும்.

¨ பெரும் நிலங்களை உள்ளடக்கிய எஸ்டேட்டுகளைக் கையகப்படுத்த வேண்டும்.

¨ தொழிற்சாலைகளை தொழிலாளிகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும்.

¨ வங்கிகளை தேசிய உடைமையாக்க வேண்டும்.

¨ தற்போதுள்ள காவல்துறை, இராணுவத்தை அகற்றி விட்டு தொழிலாளர்களைக் கொண்ட படைகளை உருவாக்க வேண்டும்.

¨ ¨ பழைய அரசாங்க அதிகார வர்க்கத்தை அகற்றி, தொழிலாளர்களைக் கொண்ட அரசு நிர்வாகத்தை அமைக்க வேண்டும்.

என இவை அனைத்தும் ஏப்ரல் ஆய்வுரைகளில் இருந்தன.

அப்போது நடந்த சோவியத்துகளின் அனைத்து ரஷ்ய மாநாட்டில் ‘எல்லா அதிகாரங்களும் சோவியத்துகளுக்கே’ என்ற புகழ் பெற்ற முழக்கத்தை எழுப்பினார்.

தொழிலாளர்கள் உள்ளடங்கிய உள்ளூர் மட்டத்திலான அமைப்புக்கள் புரட்சி வெற்றிக்கு முக்கிய பங்கினை வகித்தன. “தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துகள்” என்கிற தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர் நிர்வாக அமைப்புக்களில் தொழிலாளர்கள் அணி திரண்டனர். வேலைநிறுத்தம் நடத்துவதற்கான போராட்டக் குழுவாக துவங்கிய இந்த அமைப்புகள், உள்ளூர் நிர்வாக, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளாக மாறின..பல இடங்களில் ராணுவ வீரர்கள், மாலுமிகள் தொழிலாளர்களோடு இணைந்து பிரதிநிதிகளாக செயல்பட்டனர். பல பகுதிகளில் தொழிலாளர்கள்-விவசாயிகள் பிரதிநிதிகள் கொண்டதாகவும் அமைந்தன. தொழிலாளர்கள்

தங்களுடைய தேவைகள், வாழ்வாதார கோரிக்கைகளுக்காக அமைப்பு ரீதியாக ஒன்றுபடும் களங்களாக சோவியத்துக்கள் அமைந்தன.

விவசாயிகளை புரட்சியில் இணைப்பதிலும் லெனின் வெற்றி கண்டார். அன்று கிராமப்புறங்களில் வறுமை தாண்டவமாடியது. 300 ஆண்டு கால மன்னராட்சி விவசாயிகள் மத்தியில் ஒரு கொடூரமான அடிமைத்தனத்தை உருவாக்கியிருந்தது. நிலப்பிரபுக்களின் கையில் நிலப்பிரபுத்துவ தனியுடைமை வலுவாக இருந்தது. முதலாவது உலகப்போர் வந்தபோது அரசாங்கம் ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்களை போருக்கு அனுப்பியது.

விவசாயிகள் மத்தியில் அரசியல் கேள்விகள் கொந்தளிப்புடன் எழுந்தன. நிலப்பிரபுத்துவத்தை ஒழித்து, மன்னர் ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும் என்கிற முழக்கங்கள் எதிரொலித்தன. எனவே நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் எழுந்த எழுச்சி இயல்பாகவே தொழிலாளர்களையும் விவசாயிகளையும் புரட்சிக்கு அணி திரட்டியது. தொழிலாளி-விவசாயி கூட்டணி உருவாகி புரட்சியை முன்னெடுக்க வேண்டுமென்ற லெனின் வகுத்துக் கொடுத்த உத்தி வெற்றியை ஈட்டிட துணை நின்றது.

**வரலாற்றில் தொழிலாளி வர்க்கம்**

தொழிலாளிகளை புரட்சிக்கு தயார் செய்வதிலும் லெனின் பல கோட்பாடுகளை வகுத்தளித்தார். புரட்சிக்காக அணிவகுக்கும் பெரும்படையில் தொழிலாளி வர்க்கம் முன்னணி படையாக செயல்பட வேண்டும் என்ற கருத்தை அழுத்தமாக வலியுறுத்தினார். இது வரலாற்றுரீதியாக தொழிலாளி வர்க்கத்திற்கு நிச்சயிக்கப்பட்டுள்ள கடமை என்றார்.

தொழிலாளி வர்க்கம் தனது இயக்கங்களின் மூலமாக தொழிற்சங்க உணர்வை, அதாவது தங்களது கோரிக்கைகளை எழுப்ப வேண்டும் என்கிற உணர்வை பெறுகிறது. அதற்கான ஒற்றுமை உருவாக்கப்பட வேண்டும் என்ற உணர்வையும் அது அடைகிறது. சங்க வேலைகளில் ஈடுபடுவது,

நிர்வாகத்தின் போக்கினை எதிர்த்து போராடுவது, தொழிலாளர் நல சட்டங்களை இயற்ற அரசாங்கத்தை கட்டாயப்படுத்துவது போன்ற பல நடவடிக்கைகளால் தொழிற்சங்க உணர்வும் கோரிக்கைக்கான போராட்ட உணர்வும் வளரும். ஆனால் இதையும் தாண்டி வர்க்க உணர்வு தொழிலாளர்களுக்கு ஏற்பட வேண்டும் என்று லெனின் போதித்தார்.

தொழிலாளி தனது வேதனைகள், துயரங்கள், உழைப்புச் சுரண்டல் கொடுமைகள் அனைத்திற்கும் கண்ணுக்குப் புலப்படாத கடவுள் மீது பாரத்தை சுமத்தி அற்ப நிம்மதி அடைவது, தலைவிதியை மாற்ற முடியாது என்கிற அறிவியலற்ற எண்ணத்தில் மூழ்கி கிடப்பது இவை அனைத்தையும் கருத்து முதல்வாத பார்வை என்கிறது மார்க்சியம். இதற்கு மாறாக தன்னைச் சுற்றி நடக்கிற நிகழ்வுகள், அவற்றின் உண்மைகளை அறிந்து கொள்ளும் பார்வை -அதாவது பொருள்முதல்வாத பார்வை - மாற்றத்திற்கு தொழிலாளியை தயார்படுத்தும் என மார்க்சியத் தத்துவம் போதிக்கிறது.

மார்க்சிய தத்துவத்தால் வழிகாட்டப்படும் தொழிலாளி வர்க்கம் இதர விவசாயப் பிரிவுகள் உள்ளிட்ட பல்வேறு வர்க்கங்களின் நிலைமையை சரியாக புரிந்து கொள்கிறது; அவர்களையும் அணிதிரட்டி, மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கிறது; இதற்கேற்றவாறு, வர்க்க அரசியல் உணர்வு படைத்ததாக தொழிலாளி வர்க்கம் உணர்வு ரீதியில் வளர்ச்சி பெறுகிறது. லெனின் எழுதிய என்ன செய்ய வேண்டும் என்ற நூல் இக்கருத்துக்களை கொண்டதாக விளங்குகிறது.

இந்த அரசியல் உணர்வு தானாக வந்து விடாது; கம்யூனிஸ்ட் கட்சி இந்த வர்க்க உணர்வை உழைக்கும் வர்க்கங்களிடம் வளர்த்திட வேண்டும்.கட்சி என்பது தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படை என்று லெனின் எழுதினர்.

புரட்சியின் போதும், சோஷலிசக் கட்டமைப்பின் போதும் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்கள் தீவிரமாக நடைபெற்றன. 1903 ஆம் ஆண்டிலிருந்து 1917 வரை ரஷ்யாவில் வரலாறு காணாத அளவில்

தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடைபெற்றன. 1905ஆம் ஆண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களில் கலந்துகொண்ட தொழிலாளர் எண்ணிக்கை 18 லட்சத்து 43 ஆயிரம் இது படிப்படியாக ஆண்டுதோறும் அதிகரித்தது.

இந்தப் போராட்டங்களில் ஒரு முக்கிய மாற்றம் படிப்படியாக ஏற்பட்டது. தொழிலாளர்களுடைய எட்டு மணி நேர வேலை உள்ளிட்ட கோரிக்கைகளோடு அரசியல் கோரிக்கைகளையும் எழுப்பினர். மன்னராட்சிக்கு மாற்றாக ஒரு ஜனநாயக குடியரசு அமையவேண்டும் என்ற முழக்கங்கள் இந்த போராட்டங்களில் எதிரொலித்தன. இந்த போராட்டங்களை வலிமையாக நடத்திட சோவியத்துகள் பெரும் பங்கு வகித்தன.

**உண்மையான தேசப்பற்று**

முதல் உலகப் போர் மூண்ட நிலையில் தாய் நாட்டை பாதுகாக்க ஆளும் வர்க்கங்கள் பிரச்சாரம் செய்தன. உலகை ஆதிக்கம் செலுத்த வேண்டும், உலகைச் சுரண்ட வேண்டும் என்ற வெறியுடன் ஏகாதிபத்தியம் இயங்கி வருகிற நிலையில் பாட்டாளி வர்க்கமே ஏகாதிபத்திய முறையை முடிவுக்குக் கொண்டு வரும் வர்க்கமாக லெனின் கண்டார்.

எப்போதுமே தேசபக்தி என்ற முழக்கத்தை ஆளும் வர்க்கம் தனது நலனுக்காக பயன்படுத்தும். ரஷ்ய ஆளும் வர்க்கம் முதலாம் உலகப்போரில் ரஷ்ய ராணுவத்தை ஈடுபடுத்தினர். உண்மையில் ரஷ்ய ராணுவத்தில் இருந்தவர்கள் தொழிலாளர்கள், விவசாயிகள் பிரிவிலிருந்து வந்தவர்கள்தான். முதல் உலகப் போரில் பங்கேற்ற நாடுகளிலேயே அதிக இழப்பை சந்தித்தது ரஷ்யாதான். கிட்டத்தட்ட 25 லட்சம் பேர் போரில் கொல்லப்பட்டனர். அதிலும் விவசாயிகளை உள்ளடக்கிய தரைப்படைதான் அதிக இழப்பை சந்தித்தது.

அதே நேரத்தில் போரினால் முதலாளிகள் பெரிய லாபத்தை அடைந்தார்கள். பல பெரிய கம்பெனிகள் 100% மேலாக லாபம் ஈட்டினர். இந்த விவரங்கள் டூமா எனப்படும் ரஷ்ய பாராளுமன்றத்திலேயே சமர்ப்பிக்கப்பட்டது. தேசப்பற்று

எனும் பெயரால் உழைக்கும் மக்களை போரில் ஈடுபடச் செய்தது முதலாளிகளின் லாப வேட்டைக்குத்தான் என்பதை மக்கள் புரிந்துகொள்ள தொடங்கினர்.

முதலாளித்துவத்துக்கு உண்மையான தேசப்பற்று இருப்பதில்லை. உண்மையான தேசப்பற்று கோடானு கோடி உழைக்கும் மக்களின் விடுதலையோடு இணைந்தது. உண்மையான தேசப்பற்று பாட்டாளி வர்க்கத்திற்கு பிரிக்க முடியாத அளவில் அவர்களின் உணர்வோடு கலந்ததாக இருக்கும். தாய்நாட்டிற்காக போர் என்கிற முதலாளிகளின் கபட நாடகத்தை தொழிலாளி வர்க்கம் நன்கு புரிந்து கொண்டது.

புரட்சிக்கு அறைகூவல் விடுகிறபோது லெனின் மூன்று முழக்கங்களை முன்வைத்தார். சமாதானம்; உணவு; நிலம்; இந்த முழக்கம் போரின் கொடுமையாலும் பசி பட்டினியாலும் வாடிக் கொண்டிருந்த தொழிலாளி வர்க்கத்தை களத்தில் இறக்கியது. .அதேபோன்று கிராமங்களில் நிலப்பிரபுத்துவ கொடுமைகளால் வேதனை வாழ்க்கை நடத்திவந்த விவசாயிகளுக்கு, நிலம் என்கிற முழக்கம் ஒரு புரட்சிகர ஈர்ப்பை ஏற்படுத்தியது. இதன் விளைவாக தொழிலாளி - விவசாயி வர்க்க கூட்டணி உருவானது .இந்த கூட்டணி கட்சிகளின் கூட்டணி அல்ல. வர்க்கங்களின் கூட்டணி. இதற்கு பிரம்மாண்டமான ஆற்றல் இருந்தது; இந்த ஆற்றலின் விளைவாகத்தான் ரஷ்யாவில் புரட்சிகர மாற்றம் நடைபெற்றது; சோசலிசம் உருவானது.

**மார்க்சிய லெனினிய உருவாக்கம்**

கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவ சமூகத்தின் இயக்கத்தை முழுமையாக ஆராய்ந்தார். இந்த சமூகத்தில் நிலவுகிற சமத்துவமின்மை, ஏழை பணக்காரர் என்கிற ஏற்றத்தாழ்வு எதனால் ஏற்படுகிறது என்பதையும் அவர் ஆராய்ந்தார். அதேபோன்று பாடுபடும் பாட்டாளிகள் உழைப்பைச் செலுத்தி இந்த உலக செல்வத்தை உருவாக்கினாலும் அவர்கள் வாழ்க்கை பொருளாதார பற்றாக்குறை உள்ளிட்ட சிக்கல்கள் நிறைந்ததாக இருந்து வரும்

நிலையில், அவர்களது உழைப்பு எவ்வாறு சுரண்டப்படுகிறது என்பதை ஆராய்ந்து விளக்கினார்.

அதேபோன்று முதலாளித்துவ அமைப்பு சீராக நீடிப்பதில்லை. நெருக்கடிகள் தொடர்ந்து வருகின்றன. இதனாலும் வேலை இழப்பு, வேலை நிச்சயமின்மை போன்ற பிரச்சனைகளால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். அந்த நெருக்கடிகளுக்கு காரணம் என்ன என்பதையும் மார்க்ஸ் ஆராய்ந்து விளக்கினார். ஆக, சமத்துவமின்மை,சுரண்டல்,நெருக்கடிகள் ஆகிய மூன்று பரிமாணங்களையும் முதலாளித்துவ சமூகத்தின் கூறுகளாக விளக்கி அந்த மூன்று பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கான வழிவகைகளை மார்க்ஸ் விளக்கினார்.

ஏற்றத்தாழ்வை அகற்றி ,சமத்துவம்; உழைப்புச் சுரண்டலை அகற்றி உழைப்புக்கு உரிய பலன்; நெருக்கடிகள் நீங்கிய திட்டமிட்ட பொருளாதாரம்; இவை அனைத்தும் கொண்ட ஒரு சோசலிச சமூகத்தை அமைக்க முடியும் என்பதை மார்க்ஸ் விளக்கினார். கருத்துத் தளத்தில் மார்க்சியம் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. அதுவரை ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் நெருக்கடிகளும் தீர்க்க முடியாத ஆண்டவன் விதித்த கட்டளை என்ற உணர்வில் இருந்து வந்த மனித சமூகம் மெல்ல மெல்ல விழித்துக் கொண்டது.

பல இடங்களில் புரட்சிகர போராட்டங்கள் நடைபெற்றன. 1871ஆம் ஆண்டு முதன்முறையாக பாரிஸ் நகரத்தை தொழிலாளி வர்க்கம் கைப்பற்றி 71 நாட்கள் சமத்துவ சமூகத்தை அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் அது வெற்றி பெறவில்லை. முதலாளித்துவ எதிரிகள் பாரிஸ் கம்யூன் எனப்படும் அந்த எழுச்சியை அடக்கி ஒடுக்கி ஏராளமான தொழிலாளர்களை கொன்று குவித்தனர். மார்க்ஸ் இந்தப் புரட்சி அனுபவங்களை ஆய்வு செய்தார். அவரின் வழித்தடத்தில் லெனின் உலகப் புரட்சிகள் அனைத்தையும் உள்வாங்கி மார்க்சுக்கு பிந்தைய உலகம் எவ்வாறு மாறி இருக்கிறது என்பதனையும் ஆய்வு செய்து புதிய புரட்சி வியூகம் உருவாக்கினார்.

மாறியுள்ள உலக நிலைமைகள், ரஷ்ய நிலைமைகள், ரஷ்யாவில் முதலாளித்துவ எதிரிகளின் பலவீனம், பாட்டாளி வர்க்க சக்திகளின் பலம் ஆகியற்றை துல்லியமாக மதிப்பீடு செய்தார் லெனின். உலகை ஆதிக்கம் செலுத்தும் ஏகாதிபத்திய சக்திகள் ரஷ்யாவில் பலவீனமான நிலையில் இருந்ததையும் லெனின் கவனிக்க தவறவில்லை. இந்த மிகத் துல்லியமான ஆய்வு முடிவுகளின் அடிப்படையில்தான் ரஷ்ய தொழிலாளி வர்க்கம், விவசாயிகள் உள்ளிட்ட பாட்டாளி வர்க்க சக்திகளுடன் இணைந்து முதலாளித்துவத்தை வெற்றிகரமாக வீழ்த்த முடியும் என்ற முடிவிற்கு லெனின் வந்தடைந்தார்.

ரஷ்யாவில் புரட்சியை முன்கொண்டு சென்று, 1917-ஆம் ஆண்டு நவம்பர் 7-ஆம் தேதி ஒரு பாட்டாளி வர்க்க அரசை அமைத்தார். மார்க்சியம், லெனினது உருவில் மிகுந்த ஏற்றம் பெற்றது. கருத்தளவில் இருந்த மார்க்சிய தத்துவம் ரஷ்யாவில் நடைமுறைக்கு வந்தது; சோஷலிசக் கனவு நனவானது.

## தொழிலாளி வர்க்க ஆற்றல்

லெனின் காலத்தில் இருந்த தொழிலாளி வர்க்கம் தற்போது இல்லை; .இன்றைய தொழிலாளர்களால் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது; தொழிலாளி வர்க்கத்திடையே எவ்வளவோ மாற்றங்கள் நடந்துவிட்டன. இதுபோன்ற பல விதமான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இதையொட்டி பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இவற்றில் தொழிலாளி வர்க்கத்தின் ஆற்றலை குறைத்து மதிப்பிட்டு இந்த எழுத்தாளர்கள் எழுதுவதோடு மட்டுமல்லாது மார்க்சியம் லெனினியம் தவறாகிப் போய்விட்டது,! தொழிலாளி வர்க்க ஆட்சி என்கிற கருத்து லெனினோடு அஸ்தமனமாகி விட்டது என்பது போன்ற கருத்துக்களை அவர்கள் எழுதுகின்றனர்.

உண்மையில் தனது அன்றாட வேலை, பிரச்சினைகள் வருகிற போது சில போராட்டங்கள் என்ற அளவில் தொழிலாளர்கள் இருக்கும் வரை அதன் ஆற்றல் வெளியில் தெரிவதில்லை. ஆனால் முதலாளித்துவ நெருக்கடி

தொழிலாளி வர்க்கத்தின் வாழ்வாதாரத்தின் மீது தொடர் தாக்குதல்கள் அதிகரிக்கிறது. தனது வாழ்நிலையின் அடிப்படை தளர்கிற நிலையில் தொழிலாளிக்கு விழிப்புணர்வு அதிகரிக்கிறது.

ஆளும் வர்க்கத்தின் மீதான அதிருப்திகள் குவிந்து கொண்டே வருகிறது. இப்படிப்பட்ட சூழலில் ஒரு சிறு பொறி இருந்தால் போதும். அது பெரு நெருப்பாய் மாறி சமூக அடிப்படையை மாற்றிடும். ஒரு புதிய சமூகத்தை உருவாக்கிடும். இதனால்தான் லெனின் தொழிலாளி வர்க்கத்தின் ஆற்றலை சரியாகப் பயன்படுத்தி ரஷ்ய புரட்சி தலைமை தாங்கி நடத்தியவர் என்ற பெருமையைப் பெற்றார்.

அன்றைய ரஷ்ய ஆளும் வர்க்கங்களுக்கு எதிராக தொழிலாளர்கள் பிரமாண்டமான வேலைநிறுத்தப் போராட்டங்களை நடத்தினார்கள். இந்த போராட்டங்கள் அன்றைய ரஷ்ய தொழிலாளி வர்க்கத்தின் தன்னம்பிக்கையை வலுப்படுத்தியது. தங்களால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கை பல்வேறு போராட்டங்களால் அவர்களுக்கு உறுதிப்படுகிறது என்று லெனின் எழுதினார்.

ஒவ்வொரு வேலைநிறுத்தப் போராட்டமும் தொழிலாளர்களுக்கு தங்கள் மீதான அவநம்பிக்கையை போக்குகிறது. சுரண்டலில் இருந்து விடுதலையும், எதிர்காலமும் தங்கள் கையில் உள்ளது என்று நம்பிக்கை அவர்களுக்கு வலுப்படுகிறது. தாங்கள் தனி நபர்கள் அல்ல என்ற உண்மையும், தாங்கள் ஒரு வர்க்கம் என்ற உண்மையும் அவர்களுக்கு புலப்படுகிறது.

அன்றைய ரஷ்யாவில் இந்த நம்பிக்கை வளர்வதை துல்லியமாக கணித்த லெனின் அவர்களது ஆற்றலை சரியான திசைக்கு கொண்டு செல்லும் உத்திகளையும் உருவாக்கினார். பாட்டாளி வர்க்க ஒற்றுமை என்ற கருத்தை அழுத்தமாக வலியுறுத்தினார். தொழிலாளி வர்க்கம் தலைமை தாங்க, தொழிலாளி விவசாயி கூட்டணி அச்சாணியாகத் திகழ, அனைத்து உழைக்கும் மக்களும் ஒன்று திரண்டு நடத்திய ஒரு மாபெரும் மக்கள் திருவிழாதான் ரஷ்ய புரட்சி. எனவே லெனின் காலத்திற்கு பிந்தைய

மாற்றங்களை ஆய்வு செய்ய வேண்டும். அதே நேரத்தில் வர்க்க உணர்வு பெற்ற பாட்டாளி வர்க்கமும், அதன் வர்க்க ஒற்றுமையும் சோஷலிசத்தை சாதித்திடும் என்ற கோட்பாடு இன்றும் பொருந்துவதாக அமைந்துள்ளது.

**முற்போக்கான அனைத்துக்கும் திறவுகோல்**

லெனின் தலைமையில் நடைபெற்ற ரஷ்யப் புரட்சி முற்றிலும் வேறுபட்டது. அந்தப் புரட்சி ஒட்டுமொத்த மனித குல விடுதலைக்கான புரட்சியாக இருந்தது. இதனால் உலகம் முழுவதும் தாக்கம் ஏற்படுத்தியது. தொழிலாளர்கள் நலன், தொழிலாளர் உரிமைகள், பெண்ணுரிமை, பெண் சமத்துவம், முற்போக்கு சிந்தனை, அறிவியல் வளர்ச்சி, திட்டமிடப்பட்ட பொருளாதாரம், உலக சமாதானம் என மனித சமூக முன்னேற்றத்திற்கு லெனின் சாதித்த புரட்சி திறவுகோலாக அமைந்தது.

புரட்சிகர தத்துவம் இல்லாமல் புரட்சிகர இயக்கம் இல்லை என்றார் லெனின். அவரது காலம் வரை இருந்த அனைத்து தத்துவங்களையும் அவர் கற்றறிந்தார். அரிஸ்டாட்டில் முதல் ஹெகல் வரை வளர்ந்து வந்த தத்துவங்கள் அனைத்தையும் அவர் கற்றறிந்து, அவற்றுக்கெல்லாம் மணிமகுடமாகத் திகழும் மார்க்சியத்தை சமூக மாற்றத்தை சாதிக்க வல்ல தத்துவமாகக் கண்டறிந்தார். இதுவரை வந்த தத்துவ ஞானிகள் எல்லாம் உலகத்தை பல கோணங்களில் விளக்கினார்கள்; ஆனால் உலகத்தை மாற்றுவதுதான் முக்கிய கடமை என்ற மார்க்சிய நெறியில் லெனின் செயல்பட்டார். எனவேதான் மார்க்சிய லெனினிய தத்துவம் புரட்சிக்கான விடுதலை தத்துவமாக திகழ்கிறது.

லெனினியத்தின் துணைகொண்டு, சமகால சவால்களை எதிர்கொண்டு உலகப் பாட்டாளி வர்க்க ஒற்றுமையை வலுப்படுத்துவோம்! சோசலிசம் படைப்போம்!

## சிங்காரவேலர்: சமூக நீதியும் பொதுவுடைமையும்

*ச . லெனின்*

*ஒவ்வொருவரின் சுதந்திரமான வளர்ச்சியையே அனைவரின் சுதந்திரமான வளர்ச்சிக்கு நிபந்தனையாகக் கொண்ட ஒரு கூட்டமைப்பை நாம் நிச்சயம் பெறுவோம் ..*

- கம்யூனிஸ்ட் அறிக்கை, மார்க்ஸ் - எங்கெல்ஸ்

விடுதலை போராட்டத்தின்போது இந்திய முதலாளி வர்க்கம், ஏகாதிபத்திய எதிர்ப்பை சில சமரசங்களுடன் முன்னெடுத்த போதும் சமூக சமத்துவத்திற்கான போராட்டங்களை பெரிதாக முன்னெடுக்கவில்லை. சாதிய மேலாதிக்கம் நிலவிய இந்தியச் சமூகத்தில் பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலையடைந்தாலும் உள்ளூர் ஆதிக்க சாதி யினரின் ஆதிக்கம் தொடரவே செய்யும். எனவே இங்குள்ள சாதிய மேலாதிக்கத்தை வீழ்த்துவதே முதல் வேலை என்று சமூக நீதிக்கான போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் பேசினர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பல்வேறு நிகழ் முறைகளை இதன்பொருட்டு ஆதரிக்கவும் செய்தனர்.

இந்தக் குறிப்பிட்ட காலகட்டத்தில்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திற்கு எதிராகவும், சாதி ஆதிக்கத்திற்கு எதிராகவும், பொருளாதார சமத்துவமின்மைக்கு எதிராகவும் ஏககாலத்தில் செயலாற்றுவதன் தேவையை சிங்காரவேலர் முன்னுணர்ந்து பணியாற்றினார் என்பது கவனிக்கத்தக்கது.

### சிங்காரவேலரின் பங்கு

இந்தியாவில் பொதுவுடைமை கருத்தை முதன்முதலில் பொதுவெளியில் முழங்கியவர் தோழர் சிங்காரவேலர் தான். 1922இல் கயாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் தன்னை கம்யூனிஸ்ட் அகிலத்தின் பிரதிநிதி என்று பிரகடனப்படுத்திக் கொண்டு அவர் பேசியதே இந்தியாவில்

பொதுவுடைமை கருத்தியலின் முதல் குரலாகும். அதுவே அந்தக் காங்கிரசில் ஒலித்த பொதுவுடைமை சிந்தனையுமாகும்.

தமிழகத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை துவங்கப்படுவதற்கு பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பே சென்னையில் மே தினத்தைக் கொண்டாடியவர் சிங்காரவேலர். இக்காலகட்டத்தில்தான் காங்கிரஸ் கட்சியிலிருந்த சாதிய மனோபாவத்தைக் கண்டித்து 1925ஆம் ஆண்டு வெளியேறுகிறார். சாதிய ஆதிக்கத்திற்கு எதிராக சமூக நிதிக்கான போராட்டத்தை முன்னெடுக்கும் நோக்கில் பெரியாரின் சுயமரியாதை இயக்கம் செயலாற்ற துவங்குகிறது. இவ்வியக்கத்திற்கான கருத்தியல் ரீதியான உள்ளடக்கங்களைக் கொடுப்பதில் சிங்காரவேலரின் பங்கு சிறப்பானதாகும். சாதி, மத பழமைவாதங்களை எதிர்ப்பதில் வறட்டுத் தனமான நாத்திகப் பிரச்சார முறையைக் கடந்த அறிவியல் கண்ணோட்டம் கொண்ட எழுத்துக்களை சிங்காரவேலர் தொடர்ந்து குடியரசு இதழில் எழுதிவந்தார். சமூக ஒடுக்குமுறை என்பது அதோடு பின்னிப்பிணைந்துள்ள பொருளாதார சுரண்டலை உள்ளடக்கியதே என்பதை வலியுறுத்திய சிங்காரவேலர், சமூக நீதிக்கான போராட்டத்தைப் பொருளாதார சமத்துவத்திற்கான போராட்டத்தோடு இணைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். சுயமரியாதை இயக்கத்தின் சமூக நீதிக் கொள்கையை பொதுவுடைமை கோட்பாட்டோடு ஒருங்கிணைக்கும் பணியையும் அவர் முன்னின்று ஆற்றினார். சமூகநீதி என்பது தனித்த ஒன்றல்ல; அது பொருளாதார சமத்துவத்தோடு பின்னிப் பிணைந்தது என்ற கருத்துநிலைக்கு இசைவு தெரிவித்த பெரியார் பிறகு அதிலிருந்து விலகியபோது அதை உரிமையோடு மிகக் கடுமையாகவே விமர்சிக்கவும் சிங்காரவேலர் தயங்கவில்லை. இந்த விமர்சனங்களையும் பெரியார் நடத்தி வந்த “பகுத்தறிவு” இதழுக்கே அனுப்புகிறார். தன்மீதான அந்த விமர்சனம் நிறைந்த அக்கட்டுரையின் கீழ் சிறுகுறிப்பை மட்டும் இணைத்து பெரியார் அதை அப்படியே வெளியிடவும் செய்கிறார். நாம் விவாதிக்கவுள்ள இக்காலப் பகுதியின்போது சிங்காரவேலரின் வயது எழுபதுக்கு மேல் என்பதை நினைவில் கொள்வதும் அவசியமாகும்.

1926-27 காலத்தில்தான் நேரு சோஷலிச சோவியத் ஒன்றியப் பயணத்தை முடித்துக்கொண்டு இந்தியா வந்தார். ரஷ்ய நாட்டின் திட்டமிட்ட பொருளாதாரத்தினால் கவரப்பட்ட அவர் அதை நமது சொந்த முறையிலேயே அமல்படுத்தவேண்டும் என்று பேசினார். 1931இல் இதனடிப்படையில் ஒரு பொருளாதார திட்டத்தை நேரு கராச்சி காங்கிரசில் முன்வைத்தார். அதை அம்மாநாடும் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டது. இத்திட்டம்

தனியுடைமையை ஆதரித்ததோடு, முக்கிய ஆலைகளையும், கனிமவளச் சுரங்கங்களை மட்டும் அரசு கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறியது. "பொதுவுடைமை என்பது பொருளாதார அர்த்தத்தில் மட்டுமே" என்றும் அது கூறியது. இதுவே நேரு முன்வைத்த "சொந்த முறையிலான" பொதுவுடைமை திட்டம். அதாவது அரசியல் மற்றும் கலாச்சார (சமூக) ரீதியான சமத்துவத்தை இத்திட்டம் முன்வைக்கவில்லை என்பதே அதன் பொருளாகும்.

தேசிய அளவில் காங்கிரசின் பொதுவுடைமை கொள்கை இப்படியாக இருந்த போது தமிழகத்தில் கம்யூனிஸ்ட் கட்சி துவங்கப்படாத நிலையில் அது இங்கு வேறு ஒரு குரலாக ஒலித்தது. பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் புரிதல் மற்றும் செயல்பாட்டில் அது எதிரொலித்தது. அதில் சிங்காரவேலரின் தெளிவான சித்தாந்த போரும், அதனூடாக அவர் அவ்வியக்கங்களில் ஆற்றிய பணிகளும், பங்கும் மிக முக்கியமானதாகும்.

## பெரியார் சுயமரியாதை இயக்கம்

வகுப்பு வாரி பிரதிநிதித்துவ திட்டத்தைக் காங்கிரஸ் ஏற்காதது மற்றும் அங்கு நிலவிய சாதிய பாகுபாடுகள் உள்ளிட்ட காரணங்களுக்காக காங்கிரசிலிருந்து வெளியேறிய பெரியார் 1929ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் செங்கல்பட்டில் சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநாட்டை நடத்தினர். 'சுயமரியாதை இயக்கமும் பொதுவுடைமையும்' என்கிற தனது நூலில் இம்மாநாடுகள் குறித்தும், அதன் பிறகான பெரியாரின் செயல்பாடுகளையும் பேரா. கோ. கேசவன் விரிவாக விளக்குகிறார்.

சுயமரியாதை இயக்கத்தின் மாநாட்டில் இயற்றப்பட்ட பதினோரு தீர்மானங்களில் "சமயத்தையும் சாதியையும் தகர்க்கின்ற தன்மையில் தீர்மானங்கள் அமையவில்லை. சமயத்திலும், சாதியிலும் உள்ள மூடப்பழக்கங்களையும் வேறுபாடுகளையும் களைந்து அவற்றைச் சனநாயகப்படுத்தும் தன்மையே அதில் இருந்தது" என்கிறார் அவர்.

"அன்றைய பிரதான தொழில் உறவான நிலவுடைமை சீர்திருத்தங்கள் பற்றி எதுவும் இல்லை. ஆனால் நிலவுடைமையின் கலாச்சார அம்சங்களில் (சாதி, மத பழமைவாதங்கள்) உள்ள ஜனநாயகமற்ற அம்சங்களைத் தாக்குகிறார்."
"அரசியலில் ஏகாதிபத்திய ஆதரவு நிலையும் (சைமன் குழுவை ஆதரித்தது), சாரத்தில் நிலவுடைமை கலாச்சார எதிர்ப்பும் நிலையும் கையாளப்பட்டது. சமூக சீர்திருத்தவாதிகளில் பெரும்பாலானோர் அரசு ஆதரவாளர்களாகவே இருந்துள்ளனர். அரசு ஆதரவு இருந்தால்தான்

சட்டங்களின் மூலம் சமூக சீர்திருத்தங்களைக் கொண்டு வரமுடியும் என்ற எண்ணம் இவர்களிடம் இருந்தது."

அதே நேரம் அடுத்த இரண்டு மாநாடுகள் நடக்கும் காலத்திற்குள் பெரியாரின் கருத்துக்களில் ஒரு மேல்நோக்கிய நகர்வு (Upward Mobility) உள்ளது என்பதை 1931 காலகட்டத்தில் "குடி அரசு" இதழில் பெரியாரின் எழுத்துக்கள் எடுத்துரைக்கிறது என்கிறார் கோ.கேசவன்.

"இன்றைய முயற்சியை விட, சாதியை ஒழிப்பதென்பது மிகுதியாகச் சமதர்மமும் பொதுவுடைமைத் தன்மையும் கொண்டதாகும். " (குடி அரசு 4.1.1931) "எல்லா விஷயங்களிலும் ரசிய அரசாங்க சீர்திருத்தமே மேலானது." (குடி அரசு - 1.2.1931)

"பொதுவுடைமைக்கு வெள்ளையராட்சிதான் விரோதமானதாக இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. நமது நாட்டில் உள்ள வருணாசிரம தருமந்தான் பொதுவுடைமைக்கு விரோதமானதாகும்." (குடி அரசு 6.71931). இப்படியான பலவீனத்துடன் பொதுவுடைமையைக் கலாச்சார அளவில் புரிந்து கொள்ளும் நிலையில் தான் பெரியாரின் ரஷ்யப் பயணம் நடந்ததாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

"தீண்டாமையின் கலாச்சார அம்சத்தைப் புறக்கணிக்க முடியாது எனினும் அதன் வேர்கள் பொருளாதாரத்தில் கட்டுண்டது" என்பதையும் கோ.கேசவன் தனது நூலில் சுட்டிக்காட்டுகிறார்.ரஷ்யப் பயணத்திற்கு முன்பே பெரியாருக்குப் பொதுவுடைமை கருத்துக்கள் மீது ஒரு ஈர்ப்பு இருந்ததை மேலே உள்ள பதிவுகள் விளக்கும். அதேபோல் 1931இல் விருதுநகரில் நடந்த சுயமரியாதை மாநாட்டிற்கு சிங்காரவேலர் அழைக்கப்பட்டிருந்தார். உடல் நிலை காரணமாக அவரால் அம்மாநாட்டில் பங்கேற்க இயலாதபோதும் மாநாட்டுத் தீர்மானங்கள் மீது தனது விருப்பத்தைத் தெரிவித்திருந்தார். 1931 டிசம்பர் மாதம் சென்னையில் நடைபெற்ற சுயமரியாதைக்காரர்கள் மாநாட்டை அவர் திறந்து வைத்தார்.

"இங்கு மேல் சாதி-கீழ் சாதி என்பது அதிகமாகவும் முதன்மையாகவும் இருப்பதால் அது பணக்காரர் - ஏழை தத்துவத்திற்கு ஒரு கோட்டையாக இருந்து வருகிறது" என்கிற பெரியாரின் கருத்தை நேர்மறையாக சிங்காரவேலர் அணுகினார். இக்கருத்தைச் செழுமைப் படுத்தும் வகையில் "பொருளாதார வேறுபாடுகள் இருக்கும்வரை சாதி சமய வேறுபாடுகள் நீங்க இயலாது என்றும், சாதி சமய சீர்திருத்தங்களோடு நின்று விடாமல், இயக்கத்தினர் ஒரு பொருளாதாரத் திட்டத்தை

முன்வைத்து அரசியல் துறையில் இறங்க வேண்டும்" எனவும் சிங்காரவேலர் சுட்டிக்காட்டினார்.

பெரியாரின் "குடி அரசு" இதழில் “பிரிட்டிஷ் அரசின் விளைவுகள்", "மதமும் அரசியலும்", "ஜாதி ஒழிப்பு", “சமூக அமைப்பும் பொருளாதாரமும்", "சமதர்ம விளக்கம்" போன்ற தலைப்புகளில் சிங்காரவேலர் தொடர் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

**ரஷ்யப் பயணமும் - மாற்றமும்**

சோவியத் ஒன்றிய பயணம் பெரியாருக்குப் பல விஷயங்களைத் தெளிவாக்கியது. "முதலாளித்துவ அமைப்பினை வீழ்த்தி, தனது நாட்டில் சோஷலிசத்தை கட்டி வளர்த்து வரும் சோவியத் ஒன்றியம் ஒன்றுதான் மதத்தின் பிடிப்பிலிருந்து மக்களை விடுதலை அடைய வகை செய்துள்ளது" என்பதையும் உணர்ந்தார்.

“பெரியாரின் சுயமரியாதை இயக்கம் துவக்கத்தில் பிராமண எதிர்ப்பு, இந்துமத எதிர்ப்பு என்பவற்றைப் பிரதானமாக வைத்துத்தான் ஆரம்பிக்கப்பட்டது. இந்து மத எதிர்ப்பிற்கு ஆதரவான கருத்துக்களைத் தேடித்தேடிச் சேகரித்தபோது ராபர்ட் இங்கர்சால்லின் மத எதிர்ப்பு கருத்துக்களைப் பெற்று அதையும் அவர்கள் உள்வாங்கிக் கொண்டனர். இத்தகைய மத எதிர்ப்புக் கருத்துக்கள் பிற்காலத்தில் மதத்தின் பிடியிலிருந்து மக்களை விடுவித்த ரஷ்யாவின் அணுகுமுறைக்கு இட்டுச் சென்றது. இப்படித்தான் பொதுவுடைமை கருத்துக்களை நோக்கி பெரியாரும் அவர்தம் இயக்கமும் வந்தடைந்தனர்” என்றும் கூறப்படுகிறது.

"சிங்காரவேலு அவர்களது பிரச்சாரத்தின் விளைவாகவும், சோவியத் ஒன்றியம் உள்ளிட்ட பல மேலை நாடுகளில் ஈ.வெ.ராமசாமி அவர்களின் அனுபவத்தின் பயனாகவும் சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் பலரிடையிலும் இயக்கத்தின் தலைவராகிய ஈ.வெ.ராமசாமி அவர்களிடத்தில் இயக்கத்தைச் சமுதாய சீர்திருத்த இயக்கமாக மட்டுமன்றி, அரசியல் குறிக்கோள்களை கொண்ட ஒரு இயக்கமாக்க வேண்டுமென்ற விருப்பம் ஏற்பட்டது."

இதைத் தொடர்ந்து சிங்காரவேலர் ஒரு திட்டத்தை உருவாக்கினார். இயக்கத்தின் நோக்கத்தை விளக்கி ஒரு வேலைத் திட்டமும் அதில் உள்ளடங்கி இருந்தது. இதுவே பிரபலமாக அறியப்பட்ட ஈரோடு

திட்டமாகும். 1932 டிசம்பர் 28, 29 தேதிகளில் பெரியாரின் இல்லத்தில் இத்திட்டம் மாகாணத்தின் சுயமரியாதை இயக்க தொண்டர்கள் சுமார் 200 பேர் வரை பங்குகொண்ட கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. சிங்காரவேலர் இத்திட்டத்தை விளக்கி அக்கூட்டத்தில் பேசினார். இத்திட்டத்திற்குக் கூட்டத்தில் சிலர் எதிர்ப்பு தெரிவித்த போதும் விளக்கங்களோடு அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. இத்திட்டத்தை விளக்கி சிங்காரவேலர் பல்வேறு சுயமரியாதை மாநாடுகளில் பங்கேற்றுப் பேசினார். பெரியாரும், ஜீவாவும் தொடர்ந்து இந்த ஈரோடு திட்டத்தை விளக்கி அனைத்து சுயமரியாதை குழுக்களிலும் பேசினார்.

திட்டத்தின் அடிப்படையில் அரசியல் செயல்பாட்டைக் கொண்டு செல்லும் வகையில் தென்னிந்தியச் சமதர்ம கட்சி என்ற ஒரு தனிப்பிரிவும் சுயமரியாதை இயக்கத்தில் அமைக்கப்பட்டது.

1933 களில் ரஷ்யாவைப் பற்றி ஏகப்பட்ட கட்டுரைகள் "குடி அரசு" இதழில் வெளிவந்துள்ளன. மதம் குறித்து லெனின் எழுதிய கட்டுரைகளும், எங்கெல்சின் "கம்யூனிசத்தின் கோட்பாடுகள்" "கம்யூனிஸ்ட் அறிக்கை" உள்ளிட்டவை அவ்விதழில் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டன.

## கைதும் கைவிடலும்

"இன்றைய ஆட்சி முறை ஏன் ஒழிய வேண்டும்" என்று "குடி அரசு" இதழில் வெளியான தலையங்கத்திற்காக 1933 டிசம்பர் 30 அன்று பெரியார் கைது செய்யப்பட்டார். ஒன்பது மாதக் கால சிறைத் தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது. அவர் சிறையில் அடைக்கப்பட்டவுடன் பெரியார் விடுதலையாகும்வரை எந்த கூட்டமும் நடத்துவதில்லை என்று செயற்குழுவினர் முடிவு செய்தனர். ஆனால் ஜீவா போன்ற இளம் சுயமரியாதைக்காரர்கள் வேகமாக வேலை செய்தனர். மே தின கொண்டாட்டத்தை நடத்துமாறு அறிக்கை விடப்பட்டது.

தமிழ் மாகாண சமதர்ம மாநாடு இக்காலத்தில் நடத்தப்பட்டது. சிங்காரவேலர் இம்மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தார். உடல் நலமின்மையால் அவரால் இதில் பங்கேற்க முடியவில்லை. ‘குடி அரசு’ இதழ் தடை செய்யப்பட்டிருந்ததால் "புரட்சி" என்கிற இதழ் துவங்கப்பட்டிருந்தது. அதில் "நாம் செய்ய வேண்டியது என்ன?" என்கிற தொடர் கட்டுரைகளை இக்காலத்தில்தான் சிங்காரவேலர் எழுதினார்.

"இந்த வழக்கு, முதலாளிய வர்க்கம் அல்லது மத நிறுவனத்தினர் செய்த சூழ்ச்சியின் விளைவு என்றும், குறிப்பிட்ட அரசின் அடக்குமுறைக்கு அஞ்சப்போவதில்லை" என்றும் பெரியார் தெரிவித்திருந்தார். சிறையில் இருந்த காலத்தில் காங்கிரஸ் சோஷலிஸ்ட், காங்கிரஸ் மற்றும் நீதிக்கட்சி ஆகியவை பெரியாரை தங்கள் இயக்கத்திற்கு கவர்ந்திழுக்க முயற்சிகள் மேற்கொண்டன. அதே சமயம், பெரியார் விடுதலை ஆனவுடன் சுயமரியாதை இயக்கத்தின் தேக்கத்தை உடைக்கும் வகையில் ஒரு திட்டத்தை சிங்காரவேலர் முன்வைத்தார். அதில் இயக்கத்தில் முதலாளிகள் மற்றும் சிறு முதலாளிகளைத் தவிர்த்து தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளை இணைக்க வேண்டுமென்றும், ஈரோடு திட்டத்தை அமலாகும் வழிகள் குறித்தும் பேசப்பட்டுள்ளது. "புரட்சி" இதழில் வெளியான இத்திட்டத்தின் கீழ் பெரியார் "இது சம்மந்தமான நமது அபிப்ராயத்தைச் சமீபத்தில் எழுதுவோம்" என்று ஒரு குறிப்பை மட்டும் எழுதியிருந்தார்.

இறுதியில் பெரியார் நீதிக்கட்சியினரோடு இணைந்தார். நீதிக்கட்சிக்கு ஒரு வேலைத் திட்டம் இல்லை என்றும், தான் முன்வைக்கும் வேலைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டால் நீதிக்கட்சியுடன் நிற்பதாகவும் தெரிவித்து ஒரு பத்து அம்ச வேலைத் திட்டத்தை நீதிக்கட்சிக்கு பெரியார் வழங்கினார்.

ஈரோடு திட்டத்தை முன்வைத்த போதே “டபிள்யூ. பி. ஏ. சௌந்தரபாண்டிய நாடார் உள்ளிட்ட (நீதிக்கட்சியிலும் செயல்பட்ட) முக்கியமான சில தலைவர்கள் சுயமரியாதை இயக்கத்தை பொதுவுடைமை கட்சியாக மாற்றும் திட்டத்தை ஏற்கவில்லை. அப்போதே பெரியார் ஒரு சமரசத்தை மேற்கொண்டார். பொதுவுடைமையை ஏற்றுக் கொள்வோர் சுயமரியாதை சமதர்ம கட்சியாகவும், ஏற்காதோர் சுயமரியாதை இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துவது என்பதே அந்த சமரசமாகும். இதுவே பின்னாளில் பொதுவுடைமை பிரச்சாரத்தை நிறுத்திக் கொண்டு சுயமரியாதை பிரச்சாரத்தை நீதிக்கட்சியோடு இணைந்து தொடர வழிவகுத்தது” என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நீதிக்கட்சியோடு பெரியார் தன்னை இணைத்துக் கொள்வதை சிங்காரவேலர் உரிமையோடு கடுமையாக விமர்சித்தார். "தனது சொந்தக் கட்சியின் திட்டத்தையே (ஈரோடு திட்டம்) இன்னும் நிறைவேற்றாத பொழுது பெரியார் நீதிக்கட்சிக்கு ஒரு வேலைத் திட்டத்தை அனுப்பியது குறித்தும் அவர் விமர்சனம் செய்தார். பெரியார் அனுப்பிய இந்தத் திட்டத்தைக்கூட

நீதிக்கட்சி நிறைவேற்ற இயலாதென்றும், நீதிக்கட்சியிலும் காங்கிரசுக் கட்சியிலும் முதலாளிகளே முழுப் பங்கு உறுப்பினர்களாக இருக்க, இவர்களோடு சரச சல்லாப வார்த்தைகளைப் பேசுவதால் யாது பயன்? என்று கேட்டுவிட்டு, (அரசிடம்) நல்லப்பிள்ளை பெயரெடுக்க வேண்டுமானால் அது வெகு சுளுவில் அடையாளம்" என்று முடித்துள்ளார்.

பெரியாரிடம் ஏற்பட்ட இந்த திடீர் மாற்றத்திற்கான காரணம் என்னவெனில், 29.07.1934 அன்று வெளியான அரசாணையின்படி பொதுவுடைமை இயக்கம் இந்தியாவில் சட்டவிரோதமாக்கப்பட்டது. மாகாணங்களில் செயல்பட்டு வந்த பொதுவுடைமை குழுக்களையும் தடை செய்வதென அரசு முடிவு செய்த்திருந்ததேயாகும்.

‘சுயமரியாதை இயக்கத்தை ஒடுக்க பிரிட்டிஷ் அரசு உறுதி பூண்டு விட்டதை உணர்ந்தேன், அரசின் கண்காணிப்பு, தலையீடு காரணமாக இயக்கம் ஏற்கெனவே பாதிக்கப்படத் தொடங்கியதையும் கண்டேன்; அரசின் அடக்குமுறை காரணமாக காங்கிரஸ் கட்சிகூட மறைமுக நடவடிக்கைகளுக்கு மாறிவிட்டதையும் கண்டேன். சுயமரியாதை இயக்கத்தவர்கள் சோஷலிச பிரச்சாரம் செய்வதை நிறுத்துவது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்” என்று பெரியார் குடியரசு இதழில் எழுதினார்.

சமதர்மம் பத்திரிக்கை வெளியீட்டு விழாவில் பெரியார் பேசுகையில் பெரியாரின் இந்த மாற்றத்திற்கான அர்த்தம் வெளியானது. "நாட்டில் பொதுவுடைமை கட்சியைச் சட்ட விரோதம் என அரசு அண்மையில் ஆணை வெளியிட்டுள்ளது. சுயமரியாதை இயக்கமும், அதன் சமதர்ம கட்சியும் அதன் கொள்கைகளும், திட்டங்களும் நிச்சயமாகச் சட்ட வரம்புக்கு உட்பட்டதாகும். இப்போது நடைபெறும் பிரிட்டிஷ் நிர்வாக முறை இன்றைய உலகில் உள்ள நிர்வாக முறைகள் அனைத்திலும் சிறந்தது என்பதை நாங்கள் ஏற்கிறோம்" என்று பெரியார் தெரிவித்தார். பிரிட்டிஷ் ஆட்சிக்குத் தாம் விரோதி அல்ல என்பதை ஆட்சியாளர்களுக்கு இதன் மூலம் அவர் தெரிவித்திருந்தார்.

தமிழகத்தில் கம்யூனிஸ்ட் இயக்கம் துவங்கப்படாத இக்காலகட்டத்தில் தமிழகம் எங்கும் பொதுவுடைமை கருத்துக்கள் விரிவாகப் பரவ சுயமரியாதை இயக்கம் உதவியது என்பதை மறுப்பதற்கில்லை. அதே நேரம் "தமிழ் நாட்டின் குறிப்பிடத்தக்கச் சிந்தனையாளரான பெரியார் சிந்தித்து தம் அறிவையும், ஆயிரக்கணக்கான இளைஞர்களின் அறிவையும் வளர்த்தெடுத்தார். ஆனால் அது சொல்லளவில் பொதுவுடைமையில்

போய் முடிந்தது; செயல் அளவில் அல்ல." என்று கோ.கேசவன் குறிப்பிடுகிறார்.

## பெரியார் விட்டதும் சிங்காரவேலர் தொட்டதும்

"ஈ.வே.ரா வும் பார்ப்பனரல்லாதோர் மாநாடும்" என்றொரு கட்டுரையைப் பெரியாரின் "பகுத்தறிவு" இதழுக்கு சிங்காரவேலர் அனுப்புகிறார். பெரியார் தனது சிறிய குறிப்புடன் அக்கட்டுரையைப் பிரசுரிக்கிறார். அதில் "முதலாளித்துவத் திட்டத்தை ஆதரித்துக்கொண்டு "சமதர்மம்" பேசுபவர்களாயின் அது பல்லாண்டு கோடி பாமர மக்களை ஏமாற்றுவதாகுமென அறிக. அவ்விதம் பேசும் கட்சியினரை நம்புவதும், நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதெனவும் அறிக." என்று சிங்காரவேலர் எழுதியுள்ளார். அக்கட்டுரையின் கீழ் பெரியார் எழுதியுள்ள குறிப்பில் "நான் என்னைப் பொறுத்தவரை பணக் கொடுமையை விட, பூணூல் கொடுமையே பலமானதும், மோசமானதுமென எண்ணுகிறேன்" என்று எழுதியுள்ளார்.

1934இல் நடைபெற்ற மாகாண தேர்தலில் பெரியார் இந்த அடிப்படையிலேயே ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆதரவாக நின்றார். இது பெரியாரின் முந்தய நிலைக்கு மாறானதாகும். 1932 இல் "அரசனுக்குப் பதிலாகப் பார்ப்பனனை ஏற்றி வைப்பதும், பார்ப்பனனுக்குப் பதிலாகப் பணக்காரனை ஏற்றி வைப்பதும் ஒரு நாளும் சுய மரியாதை ஆகாது; அது சுயநல மரியாதை ஆகும்" என்று பெரியார்தான் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இங்குச் சாதி பேதம் காக்கும் காங்கிரசிற்குப் பதிலாகப் பணக்காரனான ஜஸ்டிஸ் கட்சியினரை ஏற்றி வைக்கும் நிலையைப் பெரியார் அப்போது எடுத்திருந்தார். விடுதலை வேட்கை எழுச்சி உற்றிருந்த நிலையில் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றது. ஜஸ்டிஸ் கட்சி இத்தேர்தலில் படுதோல்வி அடைந்தது.

இதே காலகட்டத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆதரவு தெரிவிக்க சிங்காரவேலரிடம் சிலர் கேட்ட போது, கம்யூனிஸ்ட் அல்லது சோஷியலிஸ்ட் போட்டியிட்டால் அவரை ஆதரித்து வேலை செய்யலாம். அப்படி இல்லாதபோது காங்கிரஸ் வேட்பாளரைத் தான் ஆதரிக்க வேண்டும். ஏனெனில் காங்கிரஸானது ஏகாதிபத்திய எதிர்ப்பை பிரதிபலிப்பது. ஜஸ்டிஸ் கட்சியோ அவ்வாறில்லை என்று அவர் கூறிவிட்டார்.

ஏகாதிபத்திய ஆதரவு, ஆளும் வர்க்கத்தின் சட்டத்திற்கு உட்பட்டு நடக்கும் நல்ல பிள்ளை தனம் போன்றவற்றைத் தயவு தாட்சணியம் இன்றி சிங்காரவேலர் விமர்சித்தார். பெரியார் எதிர்த்துப் பேசிவந்த சாதி, மதம், ஒழுக்க நெறிகள் போன்றவை ஆளும் வர்க்கத்தின் நலன் சார்ந்தவையே என்கிற மார்க்சிய புரிதலோடே சிங்காரவேலர் சுயமரியாதை இயக்கத்திற்குள் செயலாற்றினார். அதே சமயம் இந்திய விடுதலைக்கான ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டம் என்பது தவிர்க்கவியலாத உடனடி கடமை என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

முதலாளித்துவ ஜனநாயகத்திற்கு உட்பட்ட சிற்சில சீர்திருத்தங்களோடு நிறைவு கொள்ளாது ஒரு முழுமையான சமூக விடுதலைக்கான வேட்கையோடுஅவர் முன்னின்றார். வறட்டு நாத்திகத்தைக் கடந்த அறிவியல் பூர்வமான இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் வழி நின்று சிங்காரவேலர் செயலாற்றினார்.

சமூக ஒடுக்குமுறைக்கு எதிராகவும், சமூகநீதிக்காகவும், சமத்துவத்திற்காகவும் போராடும் அனைவரும் ஒருவருக்கொருவர் கொடுப்பதற்கும், கொள்வதற்கும் வரலாறு நிறையவே படிப்பினைகளை நமக்கு வழங்கியுள்ளது. சமூகநீதி என்பதைத் தனித்த ஒன்றாகவும், பொதுவுடைமையை மற்றொரு தனித்த வழியாகவும் கட்டமைப்பதே தவறான கண்ணோட்டமாகும். இங்கு மேற்கொள்ளப்பட்ட விவாதங்களும் முன்வைப்புக்களும், பெரியாரா, சிங்காரவேலரா என்கிற நோக்குடையதல்ல. சமூக நீதியும் பொதுவுடைமையும் தனித்தனியானவையல்ல, அவை ஒருங்கிணைந்த செயல்பாட்டைக் கோருபவை, ஒன்றை ஒன்று உள்ளடக்கியவை என்பதை விளக்குவதற்கான ஒரு முன்னெடுப்பேயாகும்.

“சாதி, உற்பத்தி உறவுகளில் சந்தேகமின்றி தொடர்ந்து நீடிக்கிறது. சாதியும் வர்க்கமும் ஒன்றுக்கொன்று இயைந்தவை. சாதியும் வர்க்கமும் பிணைந்திருக்கின்றன. சாதிக்கும் வர்க்கத்திற்குமான பிணைப்பையும் இணைப்பையும் அறியாமல் சாதியை ஒழிக்க முடியாது.” எனவே சமூக நீதிக்கான போராட்டத்தைப் பொருளாதார சமத்துவத்திற்கான போராட்டத்தோடு இணைக்க வேண்டும். பெரியார் போன்ற சமூக சீர்திருத்த செயல்பாட்டாளர்களின் பங்களிப்புக்களையும் உள்ளடக்கிய பொதுவுடைமைக்கான செயல்திட்டத்தை கொண்டதே சிங்காரவேலரின் முன்மொழிவாகும்.

“சாதிய முறையையும், அதன் அனைத்து வடிவத்திலான சமூக ஒடுக்கு முறைகளையும் எதிர்த்துப் போராட வேண்டியது ஜனநாயகப் புரட்சியின் முக்கியமான பகுதியாகும். சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் வர்க்கச் சுரண்டலுக்கு எதிரான போராட்டத்துடன் பின்னிப் பிணைந்த ஒன்று. நிலம், கூலி, பொருளாதார கோரிக்கைகளை – சமூக உரிமைகளுக்கான கோரிக்கை போராட்டங்களோடு இணைக்க வேண்டும். இக்கடமைகளையே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டம் வகுத்துள்ளது.” அதுவே தீண்டாமைக்கு எதிரான களப்போராட்டங்கள் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன . அதை மேலும் கருத்தாழத்தோடு தீவிரப்படுத்தும் முனைப்பே நம் காலத்தின் தேவையாகயுள்ளது,

*சாதிய ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டம் வர்க்கச் சரண்டலுக்கு எதிரான போராட்டத்துடன் பின்னிப்பிணைந்த ஒன்றாகும்.*

*ஏற்றத்தாழ்வான நிலையை எதிர்த்த போராட்டமும், சமத்துவத்திற்கான பெண்களின் போராட்டமும் சமூக விடுதலைக்கான இயக்கத்தின் பகுதியே ஆகும்.* [கட்சித் திட்டம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ]

## சொல் அகராதி: மாறா மூலதனம் (Constant Capital) - மாறும் மூலதனம் (Variable Capital)

*கே . சுவாமிநாதன்*

மூலதனத்தின் சேர்மானம் மிக முக்கியமான குறியீடு ஆகும். சரக்கு உற்பத்தியில் இரண்டு வகையான மூலதனங்கள் உள்ளடங்கியுள்ளன. ஒன்று மாறா மூலதனம். இன்னொன்று மாறும் மூலதனம்.

கடந்த இதழில் சமூக அவசிய உழைப்பு நேரம், கூலி உழைப்பு, உபரி உழைப்பு, மூலதன உருவாக்கம் ஆகியவை பற்றி நாம் பார்த்தோம்.

மூலதனத்தின் சேர்மானமும் (CC - Composition of Capital) இன்னும் நமது புரிதலுக்கு தேவைப்படுகிற ஒன்றாகும்.

ஒரு சரக்கு உற்பத்தியில் கச்சா பொருட்கள், இயந்திரம், உழைப்பு சக்தி ஆகியவை ஈடுபடுத்தப்படுகின்றன. இவற்றில் எவை எவை சரக்கு இறுதி வடிவம் பெறும் போது அப்படியே மதிப்பு மாறாமல் அதற்கு மாற்றப்படுகிறது? எது இறுதி சரக்கு வடிவம் பெறும் போது கூடுதல் மதிப்பை அதற்கு தருகிறது? என்ற வித்தியாசமே மேற்கூறிய இரு வகை மூலதனத்தை வகைப்படுத்துகிறது.

உதாரணத்திற்கு, ஒரு பஞ்சாலையில் கச்சாப் பொருளாக பருத்தி (x) பயன்படுத்தப்படும். இயந்திரங்கள் (d) ஈடுபடுத்தப்படும். பின்னர் உழைப்பு சக்தி (v) ஈடுபடுத்தப்பட்டு சரக்கு உற்பத்தி நடைபெறும். அவர் இம் மூன்றுக்காகவும் செலவழிப்பதை இப்படி நாம் கூறலாம்.

$$M\ 1 = x + v + d$$

இந்த நிலையில் மூன்றும் புதிய மதிப்புகளை உருவாக்காததால்

$M1 = C\ 1$ (மூன்றின் மதிப்பு)

ஆனால் இறுதி சரக்கின் மதிப்பு இந்த M 1 ஐ விட அதிகமாக உள்ளது என்பதே உண்மை. காரணம் இந்த மூன்றோடு உழைப்பு சக்தி உருவாக்குகிற உபரி மதிப்பும் சேர்ந்து இறுதி சரக்கின் மதிப்பு (C 2) அதிகமாக இருக்கிறது.

அதாவது கச்சா பொருள் உற்பத்தி வழிமுறைக்கு ஆளாகும் போது உரு மாறுகிறதே தவிர, அது கூடுதல் மதிப்பு எதையும் உருவாக்குவதில்லை. அதன் மதிப்பு அப்படியே இறுதி சரக்கிற்கு மாற்றப்படுகிறது. இயந்திரம் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும்போது தேய்மானம் அடைகிறது. அந்த தேய்மானம் சரக்கின் இறுதி மதிப்பில் அப்படியே இடம் பெறுகிறது. அதுவும் கூடுதல் மதிப்பு எதையும் சேர்ப்பதில்லை.

ஆனால் உழைப்பு சக்தி சரக்கை உருவாக்கும்போது கூலி உழைப்பிற்கும் மிகுதியாக உபரி உழைப்பை தருகிறது. அதுவே உபரி மதிப்பாக (s) இறுதி சரக்கிற்கு அது கூடுதல் மதிப்பை தருகிறது. இதுவே மூலதன உருவாக்கத்தின் ஊற்றுக் கண் ஆகும்.

இதை இப்படி நாம் கூறலாம்.

$$C\ 2 = x + v + s + d$$

மீண்டும் தெளிவிற்காக சொல்வதானால்

x - கச்சா பொருள்
v - உழைப்பு சக்தி
s - உபரி மதிப்பு
d - தேய்மானம்

C 1 ன் மதிப்பை விட C 2 மதிப்பு அதிகமாக இருக்கிறது. இச் சரக்கு விற்கப்படும் போது கிடைப்பதை M 2 என்று கொண்டால் C 2 = M 2 ஆக கொள்ளலாம்.

இதில் லாபம் எது எனில் இறுதி சரக்கின் விலையான M 2 க்கும் மூன்று உள்ளடக்கமான - கச்சா பொருள், இயந்திர தேய்மானம், உழைப்பு சக்தி - ஆகியவற்றை வாங்க செலவழித்த தொகையான M1க்குமான வித்தியாசம் ஆகும்.

அதாவது லாபம் M 2 - M 1 = s

இப்போது மாறா மூலதனம் என்றால் என்ன என்பதற்கு வருவோம். கச்சா பொருளும், இயந்திர தேய்மானமும் இறுதி சரக்கு உருவாகும்போது உரு மாறினவே தவிர எந்த புதிய மதிப்பையும் கூடுதலாக தரவில்லை. ஆகவே அவற்றை மாறா மூலதனம் (CONSTANT CAPITAL) என்கிறோம். இதை C என வைத்து கொள்வோம்.

ஆனால் உழைப்பு சக்தி மட்டும் கூடுதல் மதிப்பை இறுதி சரக்கின் மதிப்பிற்கு தருகிறது. கூலி உழைப்பிற்கு மிகுதியாக அது தருகிற உபரி உழைப்பின் பங்களிப்பு அது. அதனால் v என்பது v + s ஆகிறது. ஆகவே உழைப்பு சக்தியின் பங்களிப்பை "மாறுகிற மூலதனம்" (Variable Capital) என்கிறோம். இதை V எனக் கொள்வோம்.

கச்சா பொருள், இயந்திரம் ஆகியவற்றுக்குள்ளும் உழைப்பு இருக்கிறது. ஆனால் அது உறைந்து போன "செத்த உழைப்பு". ஆனால் புதிய சரக்கை உற்பத்தி செய்யும் போது அதில் ஈடுபடும் உழைப்பு சக்தி " உயிருள்ள உழைப்பாக" புதிய கூடுதல் மதிப்பை தருகிறது.

இப்படி மூலதனத்தின் சேர்மானத்தை எதற்காக ஆய்வு செய்ய வேண்டும்? இது தொழில் நுட்ப பயன்பாட்டின் அளவை, பங்களிப்பை பற்றிய குறியீடு என்பதே அதன் முக்கியத்துவம். ஒரு பெரும் தொழிலில் இயந்திரங்கள் பயன்பாடு அதிகம் இருக்கும். சிறு தொழில்களில் இயந்திர பயன்பாடு குறைவாக இருக்கும்.

மூலதன சேர்மானம் (CC) = மாறா மூலதனம்/ மாறும் மூலதனம் (C / V)

மேற்கண்ட விகிதம் அதிகமாக இருந்தால் உற்பத்தியில் தொழில் நுட்ப பயன்பாடு அதிகமாக இருக்கிறது என்று பொருள். இவ் விகிதம் குறைவாக இருந்தால் உற்பத்தியில் தொழில் நுட்ப பங்களிப்பு குறைவாக இருக்கிறது என்று பொருள். இக் கருத்தாக்கத்தை கொண்டு ஒரு தொழிற்சாலையில், தொழிலில், சமூகத்தில் மூலதன சேர்மானம் எவ்வாறு இருக்கிறது என்பதை அறிய முடியும்.

இயந்திரம் அதிகமாக பயன்படுத்தப்படும்போது சமூக அவசிய உழைப்பு நேரம் இன்னும் குறையும். ஆனால் தொழிலாளியின் வேலை நாள் அளவு குறைக்கப்படுவதில்லை. முதலாளித்துவ சமூகம் அதை அதிகரிக்க வாய்ப்பு கிடைக்குமா என்றே அலைவதை பார்க்கிறோம். அப்படியெனில் C/V அதிகமாக இருந்ததெனில் உழைப்பு சக்தி பயன்பாட்டில் கூலி உழைப்பை குறைத்து உபரி உழைப்பை அதிகமாக்குகிறார்கள்; அதிகமான உபரி மதிப்பு முதலாளிகளால் ஈட்டப்படுகிறது என்பதே அதன் பொருள். ஆகவே மூலதன சேர்மானத்தில், மாறா மூலதன உள்ளடக்கம் அதிகரிக்கும் போது சுரண்டல் அதிகரிக்கிறது என்று பொருள். தொழில் நுட்பம் அதிகமாக பயன்படுத்தப்படும் பெரு நிறுவனங்களின் ஊழியர்க்கு அதிக சம்பளம் கிடைக்கலாம். ஆனால் அவர்கள் செலுத்துகிற உபரி உழைப்பு மிகுவதால் சுரண்டலும், மூலதனக் குவிப்பும் அதிகமாகிறது என்பதே உண்மை.

தற்போது செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) மற்றும் பெருந்தரவு (Big data) பயன்பாடு ஆகியன விரிவாக்கம் பெறும் காலம் ஆகும். ஆகவே அவை உபரி மதிப்பை எவ்வாறு அதிகரிக்கும்; மேலும் மேலும் குவிக்கும் என்ற புரிதலுக்கு இச் சொற்கள் பற்றிய புரிதல் முக்கியமானது ஆகும்.

## வரலாறு என்னை விடுதலை செய்யும்

*(கியூபாவில் ஆயுதம் தாங்கிய புரட்சிக்கான முன்னெடுப்பாக 1953 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் தேதி கியூபாவின் சாண்டியாகோ டி எனும் இடத்தில் அமைந்திருந்த மான்கடா ராணுவப் படைத்தளத்தின்மீது ஃபிடல் காஸ்ட்ரோவும் அவரது தோழர்களும் தாக்குதல் நடத்தினர். அப்போது கைது*

*செய்யப்பட்ட தோழர் ஃபிடல், நீதிமன்றத்தில் ஆற்றிய உரையின் மிகச் சிறிய பகுதி இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.)*

என்னைக் கனவு காண்பவன் என்று கூறுபவர்களுக்காக மார்த்தியின் பின்வரும் வார்த்தைகளைக் கூறுகிறேன்: “உண்மையான மனிதன் வசதியிருக்கும் பாதையை நாடமாட்டான். மாறாக, கடமையிருக்கும் பாதையைத்தான் தேடுவான். அவன்தான் செயல்திறனுள்ள மனிதன், அவனது இன்றைய கனவுகள்தான் நாளைய நீதிகளாக மாறும். ஏனெனில் அவன் வரலாற்றில் முக்கிய நடப்புகளை அறியப் பின்னோக்கிப் பார்க்கிறான். காலத்தின் கொப்பரையில் மக்கள் ரத்தம் தோய்ந்தபடி பொங்கி வருவதை அவன் காண்கிறான். எனவே, எதிர்காலம் என்பதை கடமையின் பக்கத்தில்தான் இருக்கிறது என்பதை சிறிது கூடத் தயக்கமின்றி அறிகிறான்”

கீழ்தரமான எண்ணங்களை கொண்ட மனிதர்கள் ஒவ்வொரு சமூகத்திலும் இருக்கிறார்கள். துன்புறுத்தி இன்பங்காண்போரும், கொடியவர்களும், தங்கள் முன்னோரின் இழிச்செயல்களையெல்லாம் தாங்கி, மனிதப் போர்வையில் வளையவரும் இவர்கள், உண்மையில் அரக்கர்கள்தான்.

அதிகாலை நேரத்தில் எங்களது தோழர்கள் பலரும் ராணுவ முகாமிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கு ஊர்திகளில் அழைத்துச்செல்லப்பட்டனர். ஏற்கெனவே சித்திரவதைகளால் உருக்குலைக்கப்பட்ட அவர்கள், பின்னர், கைகள் கட்டப்பட்டும், வாயில் துணியடைக்கப்பட்டும் விடுவிக்கப்பட்டு ஒதுக்குப்புறமான பகுதிகளில் படுகொலை செய்யப்பட்டனர். ஆனால் ராணுவத்திற்கு எதிராக நடந்த போரில் இறந்ததாக அவர்கள் பதிவு செய்யப்பட்டனர். இந்தப் படுகொலைச் செயல் பல நாட்கள் தொடர்ந்தது. கைதிகளில் சிலர் மட்டுமே உயிர் பிழைத்திருந்தனர். கொலை செய்யப்பட்டவர்களில் பலரும் தங்களது கல்லறைகளை தாங்களே தோண்டிக் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். பலரும் பின்னால் கைகள் கட்டப்பட்டு உயிரோடு புதைக்கப்பட்டார்கள். என்றாவது ஒருநாள் புதைக்கப்பட்ட இடங்களிலிருந்து இவர்கள் தோண்டியெடுக்கப்படுவார்கள். பின்னர் அவர்கள் மக்களால் தோள்களில் சுமந்து செல்லப்பட்டு, மார்த்தியின் கல்லறைக்கருகே புதைக்கப்படுவார்கள்.

வழக்கமாக வழக்கறிஞர்கள் முடிப்பதைப்போன்று குற்றம் சாட்டப்பட்டுள்ள என்னை விடுதலை செய்ய வேண்டும் என்று நான் முடிக்கப்போவதில்லை. என்னுடைய தோழர்கள் பைன் தீவின் கொடுஞ்சிறைக்குள்ளே எண்ணற்ற கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் எனக்கு விடுதலை வேண்டுமென்று என்னால் கேட்கமுடியாது.

அவர்களுடைய விதியை நானும் பகிர்ந்துகொள்ள, என்னையும் அவர்கள் இருக்குமிடத்திற்கே அனுப்பிவையுங்கள். ஒரு நாட்டின் தலைவன் குற்றவாளியாகவோ அல்லது திருடனாகவோ இருக்கும் பட்சத்தில், அந்த நாட்டின் நேர்மையான மனிதர்கள் ஒன்று உயிரை விடவேண்டும் அல்லது சிறையில் வாடவேண்டும் என்ற நியதி புரிந்துகொள்ளக் கூடியதுதான்.

நீதிபதிகளின் கோழைத்தனத்தாலோ அல்லது நீதிமன்றங்களின் மீது ஆட்சியாளர்களுக்கு உள்ள பிடிப்பினாலோ இன்னமும் சட்டத்தின் முழுவலிமையும் குற்றவாளிகளின் மீது பாயாமலிருக்குமானால், அந்த நிலையிலும் நீதிபதிகள் தங்களது பதவிகளைத் துறக்காமல் இருப்பார்களேயானால், மதிப்பிற்குரிய நீதிபதிகளே, உங்களைக் கண்டு நான் பரிதாபப்படுகிறேன். இதற்கு முன் எப்போதும் இருந்திராத அவமானம் நீதித்துறையின்மீது விழப்போவது குறித்து நான் வருத்தப்படுகிறேன்.

இதுவரை யாரும் அனுபவித்திராத வகையில் எனது சிறைவாசம் மிகக் கடுமையாக இருக்கும் என்பதையும், கோழைத்தனமான அடக்கு முறைகளும் மிருகத்தனமான கொடுமைகளும் அதில் நிறைந்திருக்கும் என்பதையும் நான் நன்றாக அறிவேன். இருந்தாலும், எனது உயிரினுமினிய எழுபது தோழர்களை பலி வாங்கிய அந்தக் கொடுங்கோலனின் கோபத்தைக் கண்டு நான் எப்படி அஞ்சவில்லையோ, அதைப்போன்றே இந்தச் சிறைவாசத்தை கண்டும் நான் அஞ்சப் போவதில்லை. என்னைத் தண்டியுங்கள். அது எனக்குப் பொருட்டல்ல. ***வரலாறு என்னை விடுதலை செய்யும்.***

தமிழில். வீ.பா.கணேசன்